சிவமயம்

குமரகுருபரன்

லர் 15] 1964-ஞு சித்திரை-மீ 1 ம்உ 13-4-64 [இதழ் 4

தனிப் பிரதி 13 நயா பைசா வருடச் சந்தா ரு. 1½

ஆசிரியர் குழு

1. வித்துவான் ஸ்ரீ முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் அவர்கள்
ஸ்ரீ காசிமடம் இளவரசு, திருப்பனந்தாள்.
2. திரு. கே. சிவராமன் அவர்கள் M. A.,
சைவ சித்தாந்த தத்துவ விரிவுரையாளர்,
காசிச் சர்வகலாசாலை, காசி.
3. திரு. கே. எம். வேங்கடராமையா அவர்கள் M. A. B. O. L.,
பிரின்ஸிபால், செந்தமிழ்க்கல்லூரி, திருப்பனந்தாள்.
4. ராவ்சாஹிப், வித்துவான். திரு. கு. அருணாசலக் கவுண்டர்
அவர்கள். தலைமைத் தமிழ் விரிவுரையாளர், ம. தி. தா. இந்துக்
கல்லூரி, திருநெல்வேலி.
5. திரு. ஆ. சி. ஷண்முகநயினார் பிள்ளை அவர்கள் B. A., B. L.,
வழக்கறிஞர், தென்காசி.
6. திரு. டி. எச். விவேகானந்தம் பிள்ளை அவர்கள் B. A., B. L
(Verification Officer) இந்து அறநிலைய இலாகா,
20, நுங்கம்பாக்கம் ஹைரோடு. சென்னை - 6
7. திரு. T. B. சித்தலிங்கம் அவர்கள் M. A.
தமிழ் விரிவுரையாளர், காசி இந்துப் பல்கலைக்கழகம், காசி.

T. M. குமரகுருபரன் பிள்ளை B. A., B. L.,
நிர்வாக ஆசிரியர்.

உள்ளுறை

பக்கம்

1. திருவாசகம் ஒரு முத்தமிழ் நூல் 185
2. திருமந்திரம், ஐந்தாம் தந்திரம். (Tirumantiram Tantra the fifth) ... 198
3. இராமலிங்க சற்குருபுலம்பற் கண்ணி 201
4. சேக்கிழார் கவி வளம் ... 202
5. அப்பர் சுவாமிகளின் அற்புதத் திருப்பதிகங்கள் (ஆங்கில மொழிபெயர்ப்பு) 208
6. அரிசிற்கரைப் புத்தூர் ... 209
7. Hymns of the Tamil Saivite Saints 215
8. திருவருட்பயன்—தெளிவுரை ... 216
9. நீதிநெறிவிளக்கம் (உரை நடையும், ஆங்கில மொழிபெயர்ப்பும்) ... 220
10. திருப்பல்லாண்டு ... 224
11. தாயுமானவரின் – பராபரக்கண்ணிகள். பொழிப்புரையும் ஆங்கிலமொழி பெயர்ப்பும் 230
12. Sri Kumaragurupara Swamigal Memorial Feeding Charity at Kedarnath 231

உ

சிவமயம்

திருச்செந்திலாண்டவன் துணை

மலர் 15 || குரோதி-ஷு சித்திரைத் திங்கள் 1-ம்வ [13-4-64] || இதழ் 4

திருவாசகம் – ஒரு முத்தமிழ் நூல்

திரு. வ. சு. செங்கல்வராய பிள்ளை அவர்கள், M. A.,
சென்னை.

சைவத் திருமுறைகள் பன்னிரண்டில் (1) தேவாரம்-ஏழு திருமுறைகளும்; (2) திருவிசைப்பா-ஒன்பதாந் திருமுறையும்; (3) பதினோராந் திருமுறையில்-காரைக்கால் அம்மையார் அருளிய மூத்த திருப்பதிகங்கள் இரண்டும் - இசைத் தமிழ் நூல்கள் என்ப; ஏனையவை (எட்டு-திருவாசகமும், திருக்கோவையாரும்), (பத்து-திருமந்திரமும்); (பதினொன்று - பல பெரியார்களின் பாடல் தொகுதியும்), (பன்னிரண்டு - பெரிய புராணமும்) இயற்றமிழின்பாற்படும்.

I. திருவாசகம் – இயற்றமிழ்

திருவாசகம் இயற்றமிழ் நூல் என்பதன் காரணம்; (1)அதில் அகவற்பா, வெண்பா, விருத்தப்பா, கலந்துள்ளமையாலும், (2) அதிலுள்ள பதிகங்களுக்குப் பண்கள் வகுக்கப்படாமை யாலும் போலும்.

II. திருவாசகம் – இசைத்தமிழ்

அங்ஙனமிருந்தும், ஆய்ந்து நோக்கின், திருவாசகத்தி லுள்ள பல பதிகங்கள் தேவாரத்திலுள்ள பதிகங்கள் போல இசைத் தமிழுக்கும் நன்கு பொருந்துவனவாய் உள்ளன; மேலும் அதிலுள்ள சில பாடல்கள் இயற்றமிழுக்கு அடங்காதனவாய்க், கலவைச் சீர்களை உடையனவாய்ச், சீர்கள் *மிக்கும் குறைந்தும் விரவி உள்ளனவாய் இருப்பதாலும் அவை இசைத் தமிழுக்கே உரியன என்பது ஒருவாறு புலப்படும். பின்னும் இசைப்பிரிய ராகிய இறைவருக்குத் தம் கைப்படவே தாம் உகந்து எழுதிய இந்நூலிலுள்ள பதிகங்களை இசையுடன் பாடுவதே மிக மகிழ்ச்சி யைத் தருவதாகும். ஆதலால் எந்த எந்த திருவாசகப் பதிகம் எந்த எந்த தேவாரப் பதிகம் போன்றது என்பதையும், என்ன பண்ணில், என்ன ராகத்தில் அவ்வத் திருவாசகப் பதிகங்களைப் பாடலாம் என்பதையும் கீழ்க் காட்டுவாம்.

1. சிவபுராணமும்

(கலிவெண்பா) ஏனைய வெண்பாக்களும் (பதிக எண்கள்:19. திருத்தசாங்கம் 47. திருவெண்பா; 48. பண்டாயநான்மறை) வெண்பாவுக் குரியதென்று ஆன்றோர் சொல்லுகின்ற சங்கராபரண ராகத்தில் (பண். பழம் பஞ்சுரத்தில்) பாடுதற்கு உரியனவாம்.

2. கீர்த்தித் திருஅகவல்
3. திருஅண்டப்பகுதி
4. போற்றித் திருஅகவல்–

இவை மூன்றையும் சம்பந்தர் தேவாரத்தில் ஆசிரியப்பாப் போல அமைந்துள்ள திருவெழுகூற்றிருக்கைக்கு (ஓருருவாயினை I-128) உரிய பண் வியாழக்குறிஞ்சியில் (ராகம். சௌராஷ்

* *உதாரணமாக–திருவாசகம் 44. எண்ணப் பதிகம் பார்க்கவும்.*

டிரத்தில்) பாடலாம்; பின்னும், முதல் திருமுறையில் ஆசிரியப் பாப்போல அமைந்துள்ள பதிகங்கள் 75 முதல் 79 முடிய (காலை நன்மாமலர்.... முதலிய) பண் குறிஞ்சியில் (ராகம் - குறிஞ்சி, சுருட்டி, ஆரபி, இவைகள் ஏதேனும் ஒன்றில்) பாடலாம்.

5. திருச்சதகம்

(1) *'மெய்தான் அரும்பி'*....இது கட்டளைக் கலித்துறை. இதைச் சம்பந்தர் தேவாரத்தில் "காட தணிகலம்" (I-117) எனத் துவக்கும் பதிகத்திற்குறிய பண் வியாழக்குறிஞ்சி ராகம் சௌராஷ்டிரத்திலாவது, அப்பர் தேவாரத்திலுள்ள திருவிருத்தங்கள் 'பானையுடை' முதலிய (80 to 113) பதிகங்களுக்கு உரிய 'பைரவி' ராகத்திலாவது பாடலாம்.

(2) 'நாடகத்தால்' – இது கொச்சகக் கலிப்பா. இது சம்பந்தர் தேவாரத்தில் 'நாளாய போகாமே' I-62 என்னும் பதிகத்திற்குரிய பண் பழந்தக்க ராகத்தில் (ஆரபியிலாவது) "கள்ளார்ந்த பூங்கொன்றை" II-43 என்னும் பதிகத்திற்குரிய பண் சீகாமரத்திலாவது (ராகம் - நாதநாமக் கிரியையிலாவது) "பைங் கோட்டு மலர்ப்புன்னை" III-63 என்னும் பதிகத்திற்குரிய பண் பஞ்சமத்திலாவது (ராகம்-ஆகிரி) பாடலாம்.

(3) 'வெள்ளந்தாழ் விரிசடையாய்–இது திருத்தாண்டகம்போன்றது. 'ஹரிகாம் போதி' ராகத்தில் பாடுதற்குரியது.

(4) 'ஆடுகின்றிலை' (ஆறுசீர்) இது சம்பந்தர் தேவாரத்தில் "என்ன புண்ணியம்" II-106 என்னும் பதிகத்திற்குரிய பண் நட்டராகத்தில் (ராகம்-பந்துவராளி) பாடுதற்குரியது.

(5) 'இருகையானை' – இது கலிவிருத்தம். இது அப்பர் தேவாரத்தில் 'அன்னம் பாலிக்கும்' முதலிய திருக்குறுந் தொகைப் பதிகங்கட்குரிய 'நாதநாமக்கிரியை' ராகத்தில் பாடுதற்கு உரியது.

(6) 'ஈசனேயென்' – ஆறுசீர் - இது அப்பர் தேவாரத்தில் 'பற்றற்றுர் சேர்' IV-15, சுந்தரர் தேவாரத்தில் 'முத்தா முத்தி' VII-52 என்னும் பதிகங்கட்குரிய பண் பழம் பஞ்சுரத்திலாவது (ராகம் - சங்கராபரணத்திலாவது) சுந்தரர் தேவாரத்தில் 'பரவும்

பரிசு' VII-77 என்னும் பதிகத்திற்குரிய பண் காந்தார பஞ்ச மத்திலாவது (ராகம் கேதார கௌளத்திலாவது) பாடலாம்.

(7) 'தரிக்கிலேன்' - ஆறுசீர் - இது அப்பர் தேவாரத்தில் IV-22-79 - திருநேரிசைக்குரிய பண் கொல்லி நவரோசு கேதாரம் ராகங்களில் பாடுதற்கு உரியது.

(8) 'புணர்ப்ப தொக்க' - ஏழுசீர் - இது சம்பந்தர் தேவாரத்தில் 'நம்பொருள் நம் மக்கள்'. II-97 என்னும் பதிகத்திற்குரிய பண் நட்டராகத்தில் (ராகம். பந்துவராளியில்) பாடுதற்கு உரியது.

(9) 'விச்சுக் கேடு' - ஐந்து, ஆறு, சீர்கள் விரவியுள்ள பதிகம் இது. இது சம்பந்தர் தேவாரத்தில் 'நலங்கொள் முத்து' II - 59 என்னும் பதிகத்திற்குரிய பண் 'காந்தாரத்தி'லாவது (ராகம் நவரோசிலாவது), 'பங்கமேறு மதி' I - 66 என்னும் பதிகத்திற்குரிய பண் 'தக்கேசி'யிலாவது (ராகம் காம்போதியிலாவது) பாடுதற்கு உரியது.

(10) 'மாறிலாத' - எட்டுச் சீர்-இது சம்பந்தர் தேவாரத்தில் 'குன்றவார் சிலே' II - 50 என்னும் பதிகத்திற்கு உரிய பண் சீகாமரத்தில் (ராகம்-நாதநாமக்கிரியை) பாடுதற்குரியது.

6. நீத்தல் விண்ணப்பம்

இது கட்டளைக்கலித்துறை. இது திருச்சதகம் 5 (1) என்பதற்கு உரிய தேவாரப் பண்களில் பாடுதற்குரியது.

7. திருவெம்பாவை

இது வெண்டளை பிறழாத, இயற்றரவு இணைக்கொச்சகக் கலிப்பா. சம்பந்தர் தேவாரத்தில் 'துன்னம் பெய்' II - 44; 'மட்டிட்ட புன்னை II - 47 என்னும் பதிகங்கட்கு உரிய பண் சீகாமரத்திலாவது (ராகம் - நாதநமக்கிரியையிலாவது), காலைப் பொழுதில் பாடவேண்டிய பதிகமாதலால் துச்சான செய்திடினும் (IX - 21) என்னும் திருவிசைப்பாவிற்கு உரிய பண் புற நீர்மையிலாவது (ராகம் - பூபாளத்திலாவது) பாடுதற்கு உரியது.

8. திரு அம்மானை

இது ஆறடித்தரவு கொச்சகக் கலிப்பா. வெண்டளை பிறழாதது; திருவெம்பாவையைப் பற்றிக் குறித்துள்ள 'துன்னம் பெய், II - 44 என்னும் பாடலுக்கு உரிய பண்ணில் பாடுதற்குரியது.

9. திருப்பொற்சுண்ணம்

இது எண்சீர் கொண்டது; சம்பந்தர் தேவாரத்தில் 'மைம்மரு பூங்குழல் I - 4 என்னும் பதிகத்திற்கு உரிய பண் நட்டபாடை (ராகம் - நாட்டையில்) பாடுதற்குரியது.

10. திருக்கோத்தும்பி

இது நான்குசீர் கொண்டது. வெண்டளை பிறழாதது. சம்பந்தர் தேவாரத்தில் 'துன்னம் பெய்' II - 44 என்னும் பதிகத்திற்கு உரிய பண் சீகாமரத்திலாவது, திருவிசைப்பாவில் 'முத்து வயிரமணி IX - (9) என்னும் பதிகத்திற்கு உரிய *பண் சாளர பாணி' (ராகம் - ?) யிலாவது பாடுதற்கு உரியது.

11. திருத்தெள்ளேணம்

இது நான்குசீர் கொண்டது. இது திருச்சதகம் 5-(2) 'நாடகத்தால்' என்னும் பதிகம் போன்றது. அதற்குரிய பண்களில் இதைப் பாடலாம்.

12. திருச்சாழல்

இது திருத்தெள்ளேணம் போன்றது. அதற்கு உரிய பண்கள் இதற்கும் ஒக்கும்.

13. திருப்பூவல்லி

இது 10 - திருக்கோத்தும்பி போன்றது. அதற்குரிய பண்கள் இதற்கும் ஒக்கும்.

14. திருவுந்தியார்

இது கலித்தாழிசை. இது அப்பர் தேவாரத்தில் 'செய்யர் வெண்ணூலர்' IV-16 என்னும் பதிகத்தை ஒருவாறு நிகர்க்கும். ஆதலால் இதை அதற்குரிய பண் இந்தளத்தில் (ராகம் - நாத நாமக்கிரியையில்) பாடலாம்.

---

* *பண் - சாளரபாணிக்கு உரிய ராகம் தெரியவில்லை.*

15. திருத்தோணோக்கம்

இது பெரிதும் திருக்கோத்தும்பி போன்றது. அதற்கு உரிய பண்களில் இதைப் பாடலாம்.

16. திருப்பொன்னூசல்

இது 8-'திருஅம்மானை' போன்றது; அதற்கு உரிய பண் இதற்கும் ஒக்கும். ஊ(ஞ்)சல் பாடல்களை இக்காலத்திற் பெண்கள் பாடும் ராகத்தில் பாடலாம்.

17. அன்னைப்பத்து

நாலுசீர்; இது சம்பந்தர் தேவாரத்தில் 'எண்டிசைக்கும்' III - 95 என்னும் பதிகத்தை ஒருவாறு ஒக்கும். ஆதலால் இதைப் பண் சாதாரியில் (ராகம் பந்துவராளியில்) பாடலாம்.

18. குயில் பத்து

ஆறுசீர். இது சம்பந்தர் தேவாரத்தில் 'மந்திரமாவது நீறு' II - 66, அப்பர் தேவாரத்தில் 'பாடிளம் பூத' IV - 4 என்னும் பதிகங்களுக்கு உரிய பண்-காந்தாரம் ராகம். நவரோசிலாவது, சம்பந்தர் தேவாரத்தில் 'வடந்திகழ் I - 43 என்னும் பதிகத்திற் குரிய பண் தக்கராகத்திலாவது (ராகம் - காம்போதி) பாடுதற் குரியது.

19. திருத்தசாங்கம்

இது வெண்பா. சிவபுராணம் 1 பார்க்க.

20. திருப்பள்ளியெழுச்சி

எண்சீர். இதைச் சம்பந்தர் தேவாரத்தில் 'காலைநன் மாமலர்' I - 75 என்னும் பதிகத்திற்குரிய பண் குறிஞ்சியில் (ராகம் - குறிஞ்சி, சுருட்டி, ஆரபி) பாடலாம். காலையில் பாட வேண்டியதாதலின் 'துச்சான செய்திடினும்' என்னும் திருவிசைப் பாவிற்கு (IX - 21)உரிய பண் புறநீர்மையிலாவது (ராகம் - பூபாளம்) பாடலாம்.

21. கோயில் மூத்த திருப்பதிகம்

ஆறுசீர். இது திருச்சதகம் 5 (6) 'ஈசனே' போன்றது. அதற்குரிய பண்கள் இதற்கும் ஒக்கும்.

22. கோயில் திருப்பதிகம்

ஏழுசீர். இதைச் சம்பந்தர் தேவாரத்தில் 'மங்கையர்க்கரசி' III - 120 என்னும் பதிகத்திற்கு உரிய பண் புறநீர்மையிலாவது (ராகம் - பூபாளம்) சுந்தரர் தேவாரம் 'திருவு மெய்ப்பொருளும்' VII - 69 என்னும் பதிகத்திற்கு உரிய பண் தக்கேசியிலாவது (ராகம் - காம்போதி); திருவிசைப்பாவில் 'ஒளிவளர் விளக்கே' (IX - 1) என்னும் பதிகத்திற்கு உரிய பண் பஞ்சமத்திலாவது (ராகம் - ஆகிரி) பாடலாம்.

23. செத்திலாப்பத்து

எட்டுச்சீர். இது சுந்தரர் தேவாரத்தில்' அழுக்கு மெய்கொடு' VII - 54 என்னும் பதிகத்திற்கு உரிய பண் தக்கேசியில் (ராகம் - காம்போதி) பாடுதற்கு உரியது.

24. அடைக்கலப் பத்து

பெரும்பாலும் கட்டளைக் கலித்துறை. ஆயினும் இது கலவைப் பாட்டுக்களைக் கொண்டது. இது திருச்சதகம் 5 (1) மெய்தான், போன்றது எனக்கொண்டு அதற்கு உரிய குறிப்பு இதற்கு ஒக்கும் எனலாம்.

25. ஆசைப்பத்து

ஆறுசீர். இது சம்பந்தர் தேவாரத்தில் 'பூவார்மலர் கொண்டு' I - 69 என்னும் பதிகத்திற்குரிய பண் தக்கேசியில் (ராகம் - காம்போதி) பாடுதற்கு உரியது.

26. அதிசயப் பத்து

ஆறுசீர். திருச்சதகத்தில் 5 (4) 'ஆடுகின்றிலை' போன்றது. அதற்கு உரிய பண் இதற்கும் ஒக்கும்.

27. புணர்ச்சிப் பத்து

இதில் சீர்கள் ஆறு, ஏழு, எட்டு, கலந்துள்ளன. ஆதலின் இது ஒரு கலவைப் பாட்டு. இது ஒருவாறு சுந்தரர் தேவாரத்தில் 'முதுவாய் ஓரி' VII - 41 என்னும் பதிகத்திற்கு உரிய பண் கொல்லிக் கௌவாணத்தில் (ராகம் - நவரோசு) பாடுதற்கு உரியது.

28. வாழாப் பத்து

ஏழுசீர். இது கோயில் திருப்பதிகம் (22) போன்றது. அதற்குரிய குறிப்பு இதற்கும் ஒக்கும்.

29. அருட்பத்து

'வாழாப்பத்து' (28)க்கு உரிய குறிப்பு இதற்கும் ஒக்கும்.

30. திருக்கழுக்குன்றப் பதிகம்

ஏழுசீர். இதைச் சம்பந்தர் தேவாரம் 'மானினேர் விழி' III - 39 என்னும் பதிகத்திற்கும் சுந்தரர் தேவாரம் 'தம்மையே புகழ்ந்து' VII - 34 என்னும் பதிகத்திற்கும் உரிய பண் கொல்லி யிலாவது (ராகம் - நவரோசு, கேதாரம்), சுந்தரர் தேவாரத்தில் 'மற்றுப்பற்றெனக்' VII - 48 என்னும் பதிகத்திற்கு உரிய பண் பழம் பஞ்சுரத்திலாவது (ராகம்-சங்கராபரணம்) பாடலாம்.

31 கண்டபத்து

நான்குசீர். திருச்சதகம் 5-(2) 'நாடகத்தால்' போன்றது அதற்கு உரிய பண்கள் இதற்கும் ஒக்கும்.

32. பிரார்த்தனைப் பத்து

ஆறுசீர். இது திருச்சதகம் 5 - (6) 'ஈசனே' போன்றது. அதற்கு உரிய பண்கள் இதற்கும் ஒக்கும்.

33. குழைத்தபத்து

பிரார்த்தனைப்பத்துக்கு (32) உரிய குறிப்பு இதற்கு ஒக்கும்.

34. உயிருண்ணிப்பத்து

நாலுசீர். இது சம்பந்தர் தேவாரத்தில் 'உண்ணாமுலை' I-10 என்னும் பதிகத்திற்கும் சுந்தரர் 'தேவாரத்தில் வாழ்வாவது மாயம்' VII - 78 என்னும் பதிகத்திற்கும் உரிய பண் நட்ட பாடையில் (ராகம் - நாட்டை) பாடுதற்கு உரியது.

35. அச்சப்பத்து

ஆறுசீர். திருச்சதகத்தில் 5-(7)' தரிக்கிலேன்' போன்றது. அதற்கு உரிய பண் இதற்கும் ஒக்கும்.

36. திருப்பாண்டிப்பதிகம்

கட்டளைக் கலித்துறை. திருச்சதகம் 5-(1) 'மெய்தான்' போன்றது அதற்கு உரிய குறிப்பு இதற்கும் ஒக்கும்.

37. பிடித்த பத்து

ஏழுசீர். (22) கோயில் திருப்பதிகத்திற்கு உரிய குறிப்பு இதற்கும் ஒக்கும்.

38. திருவேசறவு

நாலுசீர். திருச்சதகம் 5-(2) 'நாடகத்தால்' போன்றது. அதற்கு உரிய குறிப்பு இதற்கும் ஒக்கும்.

39. திருப்புலம்பல்

இது திருவேசறவு (38) போன்றது.

40. குலாப்பத்து

நாலுசீர். திருக்கோத்தும்பி (10)க்கு உரிய குறிப்பு இதற்கும் ஒக்கும்.

41. அற்புதப்பத்து

திருச்சதகத்தில் 5-(4) 'ஆடுகின்றிலை' போன்றது. அதற்கு உரிய பண் இதற்கும் ஒக்கும்.

42. சென்னிப்பத்து

ஏழுசீர். இது திருக்கழுக்குன்றப் பதிகம் (30) போன்றது. அதற்கு உரிய குறிப்பு இதற்கும் ஒக்கும்.

43. திருவார்த்தை

இது திருப்பொற் சுண்ணம் (9) போன்றது. அதற்கு உரிய பண் இதற்கும் ஒக்கும்.

44. எண்ணப் பதிகம்

இது கலவைப் பாட்டு. ஆறு, ஏழு சீர்கள் விரவியுள்ளன. திருச்சதகம் 5-(6), 22 கோயில் திருப்பதிகம். இவைகளுக்கு உரிய பண்களிற் பாடலாம்.

45. யாத்திரைப்பத்து

இது திருச்சதகம் 5-(6) 'ஈசனே' போன்றது.

46. திருப்படையெழுச்சி

நாலுசீர். இது திருச்சதகம் 5-(2) 'நாடகத்தால்' போன்றது.

47. திருவெண்பா

சிவபுராணத்திற்கு உரிய குறிப்பு இதற்கும் ஒக்கும்.

48. பண்டாயநான்மறை

சிவபுராணத்துக்கு உரிய குறிப்பு இதற்கும் ஒக்கும்.

49. திருப்படையாட்சி

பன்னிரண்டு சீர். இது ஒருவாறு சுந்தரர் தேவாரத்தில் 'தேனெய்புரிந்துழல்' VII-10 என்னும் பதிகத்திற்கு ஒத்தது; அதற்கு உரிய பண் இந்தளத்தில் (ராகம் - நாத நாமக்கிரியை) இதைப் பாடலாம்.

50. ஆனந்தமாலை

ஆறுசீர். திருச்சதகம் 5-(6) 'ஈசனே' போன்றது.

51. அச்சோப்பதிகம்

இது திருச்சதகம் 5-(2) 'நாடகத்தால்' போன்றது. அப்பர் தேவாரம் 'கரவாடும்' IV-7 என்னும் பதிகத்திற்கு உரிய பண் காந்தாரத்திலும் (ராகம்-நவரோசு) 'சொன்மாலை' IV-12 என்னும் பதிகத்திற்கு உரிய பண் பழந்தக்க ராகத்திலும் (ராகம்-ஆரபி) இதைப் பாடலாம்.

III. திருவாசகம் நாடகத்தமிழ்

நாடகத்தமிழ் என்பதற்குச் சான்ருகப் பல அங்கங்களும், காட்சிகளும் திருவாசகத்தில் காணக்கிடக்கின்றன. உதாரணமாக.

காட்சிகள்

1. திருவெம்பாவையில் – தலைவி சில பெண்களுடன் இறைவனுடைய புகழைப்பாடிச் சென்று கூடித் தமது தோழியாம் ஒரு பெண்ணைத் துயில் எழுப்பும் காட்சி.

2. திருஅம்மானையில் பெருமான் புகழைப் பாடித்தோழியுடன் *தலைவி அம்மானை ஆடுங் காட்சி.

*தலைவி ஸ்தானத்தில் மாணிக்க வாசகர் தம்மை வைத்துக் கொள்கின்ருர்.

3. திருப்பொற் சுண்ணத்தில் * தலைவி பல பெண்களை அழைத்து என்ன என்ன பணிகள் யார் யார் செய்ய வேண்டும் என்பதைக் கூறியும் எவ்வாறு இறைவன் புகழைப்பாடித் தாம் பொற் சுண்ணம் இடிக்க வேண்டும் என்பதை விளக்கிக் கட்டளையிடும் காட்சி.

4. திருக்கோத்தும்பியில் தலைவி தும்பியை விளித்து இறைவனுடைய சேவடி மலருக்கே சென்று ஊது என்று கூறும் காட்சி.

5. திருத்தெள்ளேணத்தில் தலைவி தோழியருடன் கூடி நாம் 'தென்னா தென்னா' என்றுத் தெள்ளேணம் கொட்டுவோம் என்ற காட்சி.

6. திருச்சாழலில் தலைவி இறைவனைப் பற்றி ஒரு பெண்ணைக் கேள்வி கேட்க அவள் அவ்வினாவுக்கு விடையளிக்கும் காட்சி.

7. திருப்பூவல்லியில் தலைவி தோழியருடன் கூடி இறைவன் புகழ் பாடிப் பூவல்லி கொய்யுங் காட்சி.

8. திருவுந்தியாரில் தலைவி தோழியுடன் இறைவனுடைய வீரத்தையும் புகழையும் பாடி 'உந்தீ பற' என்னுங் காட்சி.

9. திருத்தோணோக்கத்தில் தலைவி தோழியருடன் இறைவன் புகழைப் பாடித் தோணோக்கம் என்னும் ஆடலை ஆடுங் காட்சி.

10. திருப்பொன்னூசல் - தலைவி தோழியரை விளித்து நாம் இறைவன் வீற்றிருக்கும் தலத்தையும், மாளிகையையும், அவன் எழிலையும், குணத்தையும், அவன் அணியும் குண்டலங்களையும் வாயாரப் பாடி ஊ(ஞ்)சல் ஆடுவோம் என்னுங் காட்சி.

11. அன்னைப்பத்தில் - இறைவரை நினைந்து உருகி, அவர் ஆடலையும், எழிலையும், கோலத்தையும் தலைவி தன்னிடம் எடுத்துக் கூறிய வகையை அவள் தாய் நமக்கு விளக்கும் காட்சி.

12. குயில் பத்து - தலைவி இறைவர் பெருமையைக் கூறி அவர் தன்னிடம் வரும்படி கூவுக என்று குயிலை விளித்துக் கூறுங் காட்சி.

---

* *தலைவி ஸ்தானத்தில் மாணிக்க வாசகர் தம்மை வைத்துக் கொள்கின்றார்.*

13. திருத்தசாங்கம் - தலைவி கிளியை விளித்து இறைவனுடைய திருநாமம், நாடு, முதலிய தசாங்கங்கள் எவை எனக் கேட்டு விடை அளிக்குங் காட்சி.

14. திருப்பள்ளியெழுச்சி - இறைவர் புகழைப்பாடி அவரைப் பள்ளி எழுப்புங் காட்சி.

15. திருப்படையெழுச்சியில் தொண்டர்களையும், பக்தர்களையும்,யோகிகளையும், சித்தர்களையும் கூவிஅழைத்துத் திருநீற்றுக் கவசம் அணிந்து மாயப் படையும், அல்லற் படையும் நம்மைத் தாக்காதவாறு செய்யும் போரில் நீங்கள் எவ்வாறு எங்கெங்கு நிற்க வேண்டும் என்று மணிவாசகர் அணிவகுக்குங் காட்சி.

ஏனைய பதிகங்களில்-மணிவாசகர் தமது எண்ணங்களையும் அனுபவங்களையும், இறைவனிடம் தாம் கேட்கும் வேண்டுகோள்களையும் அவரிடம் தாம் செய்யும் முறையீடுகளையும் எடுத்து விளக்கும் காட்சிகள் ஒருபால்;

"இறைவனே! உன் திருத்தாளைப் பூண்டேன், இனி நானும் புறம்போகேன், உன்னையும் புறம் போக லொட்டேன்", "நான் உன்னைச் சிக்கெனப் பிடித்தேன். இனி நீ எங்கெழுந்தருளுவது" எனத் தமது உறுதி நிலையைக் கூறி இறைவனுடன் வாதாடும் காட்சி ஒருபால்;

ஆண்டவன் தமக்கருளிய பல செயல்களை நினைத்தும், அவர் தமது சிந்தைதனைத் தெளிவித்துச் சிவமாக்கித் தம்மையாண்ட அந்தமிலா ஆனந்தத்தைக் கூறியும் மகிழுங் காட்சி ஒருபால்;

தம்மை அடியாரொடும் இறைவன் கூட்டிய அற்புதம் எத்தகைத்து என அறியேன் என வியந்து கூறி அவர் மகிழும் காட்சி ஒருபால்;

"இதோ! இறைவன் மூல பண்டாரம் வழங்குகின்றான் வந்து முந்துமின்" என உலகோரை அவர் அழைக்கும் காட்சி ஒருபால்;

இறைவன் தமக்கருளிய பேற்றை வேறு யார் பெறக்கூடும் எனப் பெருமிதத்துடன் கூறி மகிழும் காட்சி ஒருபால்;

இவ்வாறு பலவகைக் காட்சிகளை விளக்குவதாய், எவ்வாறு கட்டுகள் (பந்தங்கள்) நீங்கப்பெற்று வீடு பேற்றுக்குத் தாம் உரியவரானுர் என்பதை விளக்குவதால் மணிவாசகருடைய வாழ்க்கையே ஒருமெய்ந் நாடகமாக விளக்கந் தருவதாகும் இத்திருவாசகமென்னும் தெய்வமணி நூல்.

மேற்கூறிய பல்வகைக் காட்சிகளுள் 'தந்ததுன் தன்னை' என்னும் கோயில் திருப்பதிகம் இறுதிப் பாடலில் மணிவாசகர் இறைவனுடன் அசதி ஆடலானது யாவரும் வியக்கும் தலை சிறந்ததோர் காட்சியாகப் பொலிகின்றது. மணிவாசகருடைய நாடக வெற்றிப் பாடல் இதுவே.

முடிவுரை

மேற்கூறியவற்ருல் திருவாசகம் ஒரு முத்தமிழ் நூல் என்றும், மணிவாசகர் ஒரு முத்தமிழ் விரகர் என்பதும் ஒருவாறு புலப்படும். திருவாசகம் ஒரு முத்தமிழ் நூல் ஆகாதா என்னும் ஆசையை இறைவன் மனத்தில் தூண்ட, அது காரணமாக எழுந்ததாகும் இக்கட்டுரை. இசை, ஞானம் இல்லாத நான் ஏதோ ஒருவகையாக ஆய்ந்து இதை எழுதியுள்ளேன். இவ்வாரய்ச்சியின் உண்மையைக் கற்றறிந்த பெரியோர்கள் பின்னும் ஆய்ந்து, பிழைகள் ஏதேனும் உளவாயின் அவைதமைக் களைந்து தெருட்டுமாறு வேண்டுகின்றேன்.

"ஞானசம்பந்தம்"

அரிய கட்டுரைகளுடன் வெளிவரும் திங்கள் வெளியீடு

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்திலிருந்து வெளிவருகிறது. சமயப்பொருள் முதலியவை குறித்த தெளிவான கட்டுரைகள் அடங்கியது. சைவ சமயத்தின் உண்மைகளை உணர்வதற்குப் பெருந்துணையானது. சந்தாத் தொகையைக் கீழ்க்கண்ட முகவரிக்கே அனுப்பிவைக்கவும்.

ஆண்டுக் கையொப்பம்,

உள்நாடு ரூ. 2 – 25 * வெளிநாடு ரூ. 3 – 00

செயலாளர். "ஞானசம்பந்தம்" அச்சகம்.

தருமபுரம், மாயூரம் P. O.

திருமந்திரம் TIRUMANTIRAM

ஐந்தாம் தந்திரம் Tantra the Fifth

டாக்டர், திரு. பா. நடராசன் அவர்கள் M. A., D. Litt.,
Member, Legislative Assembly,
MADRAS-31.

மலர் 15. இதழ் 3-ன் தொடர்ச்சி

சுத்த சைவர் காட்சி

The Vision of Suddha Siva School

15. பூரணம் தன்னிலே வைத்தற்ற அப்போதம்
ஆரணம் அந்தம்; அதித்தானந் தத்தோடு
நேரென ஈராறு நீதி நெடும்போகம்
காரணமாம் சுத்த சைவர்க்குக் காட்சியே.

They fixed their thoughts on Perfection
And lost consciousness of Self's existence
They have reached the end of Vedas;
They journey through thet welve stages of yogic contemplation
And drink deep of the waters of Divine Rapture
- That their vision,
Theirs of the Suddha Saiva way.

சுத்த சைவராம் ஞானிகள் பூரணமாகிய பரம்பொருளிலே தங்கள் சிந்தையை வைக்கிறார்கள்; வைத்தபோதே நான் என்னும் தற்போதம் அறப்பெறுகிறார்கள்; வேதங்களின் இறுதியான உண்மையை உணரப்பெறுகிறார்கள்; துவாதசாந்த நெறியில் நின்று, வற்றாத பேரின்ப வெள்ளத்தைப் பருகுகின்றார்கள். அதுவே அவர் மேற்கொள்ளும் காட்சி முறையாகும்.

குறிப்பு: துவாதசமார்க்கத்தினை ஈராறு நெறியென்றார். பன்னிரண்டு ஆதாரங்கள் வழி யோக முறையிற் சென்று, அவற்றைக் கடந்த பெரு வெளியைக் காணுதல் முன்னே மார்க்க சைவராம் யோகிகட்குரிய நெறி யெனக் கூறினாராயினும், ஞானிகளுக்கும் உடன்பாடே. ஆனால் ஞானிகள் மேலும் சென்று, தற்போதமிழந்து பூரணத்தோடு ஒன்றுபடுகின்றனர்.

பன்னிரு ஆதாரங்களாவன: மூலாதாரம், சுவாதிட்டானம், மணி பூரகம், அநாகதம், விசுத்தி, ஆஞ்ஞை என்ற ஆறு ஆதாரங்களும், சூரி யன், சந்திரன், அக்னி என்ற மூன்று மண்டலங்களும், சமனை, உன்மனை, அதீதம் என்னும் மூன்று காட்சி நிலைகளுமாக, பன்னிரண்டாம்.

ஞானி சரிதை
The way of Gnani

16. மாறுத ஞானம் மதிப்பற, மாயோகம்
தேறுத சிந்தையைத் தேற்றி, சிவமாக்கி
பேறுன பாவனை பண்ணி, நெறிநிற்றல்
கூறுகு ஞானி சரிதை குறிக்கிலே.

He stills the incessant flow of thought
That even yogas severity stilleth not,
With Gnana he effaces the Self
And in bhava identifies with Siva;
That in brief is Gnani's story.

அரிய யோக நெறியாலும் அடக்க முடியாத சிந்தையை, நிலையான ஞானத்தால் நிலைபெறச்செய்து, தற்போதமழிய சிவத்தோடு ஒன்றி, முத்தியைத்தரும் சிவோகம் பாவனை செய்து நிற்பதே ஞானியின் நெறியாகும்.

வேதாந்த சித்தாந்தம் சுத்த சைவத்துக்கே உரியது
Vedanta is Siddhanti's finite goal

17. வேதாந்தம் கண்டோர் பிரம மித்தாயாதரர்
நாதாந்தம் கண்டோர் நடுக்கற்ற யோகிகள்
வேதாந்த மல்லாத சித்தாந்தம் கண்டுளோர்
சாதாரண மன்ன சைவர் உபாயமே.

The Gnanis envision Vedanta
Adepts are they in Brahmaic arts;
The yogis envision Nadanta
Theirs is an unwavering goal;

But Siddhanta sans Vedanta
Is the common Saiva's lot.

பிரம்ம வித்தை பயின்ற ஞானிகள் வேதாந்த முத்தி பெறுவர்; உறுதியான யோகநெறி நின்றோர் நாதாந்த முத்தி பெறுவர்; வேதாந்த முடிவில்லாத சித்தாந்த நெறி நிற்போர் சிறப்பில்லாச் சைவரே ஆவார்.

குறிப்பு: வேதாந்தம்-அத்துவைதமாக சிவத்தோடு கலத்தல். நாதாந்தம்-நாத தத்துவத்தோடு ஒன்றுதல். நாதம் சிவதத்துவத்திலிருப்பதால், அங்ஙனம் அத்தோடு ஒன்றப் பெற்றவர்கள், பின்னும் ஒரு மலம் கொண்ட விஞ்ஞான கலராகவே இருப்பர், மலபரிபாகம் பெற்று, சத்திநிபாதம் வீழ, அருளால் தானே சிவமாவது ஞானிக்கே ஆகும்.

வரி 3: வேதாந்தமல்லாத சித்தாந்தம்-அத்துவித சைவமாகாத நெறிகளான, மார்க்க சைவம், அசுத்த சைவம், கடும் சுத்த சைவமாகியவை.

பசு பாச ஞானம் கடந்தது இறை

God is beyond the reach of Pasu and Pasa knowledge

18. விண்ணினைச்சென்று அணுகா வியன்மேகங்கள்;
கண்ணினைச்சென்று அணுகா பலகாட்சிகள்;
எண்ணினைச்சென்று அணுகாமல் எண்ணப்படும்
அண்ணலைச்சென்று அணுகா பசுபாசமே.

High be the clouds that soar
They never shall touch the heaven's roof;
Varied be the sights that loom
They never shall touch the eye's orbs;
Even so,
Neither Pasu nor Pasa vision shall reach
Him, that contemplation scarce comprehendeth

மேகங்கள் எத்தனை உயர்ந்து சென்றதாயினும், வான முகட்டினை எட்டுவதில்லையே; காட்சிகள் எத்தனைப் பலப்பலவாயினும், கண்ணை வந்து இடிப்பதில்லையே; சிந்தனைக்கப்பாற்பட்டவனெனப்படும் சிவனையும் பசு பாச ஞானம் நண்ணுவதில்லை.

குறிப்பு: பசு ஞானத்தாலும், பாச ஞானத்தாலும் இறைவனை அடைதலாகாது. பதி ஞானமொன்றாலே ஆகும். அது சுத்த சைவநெறி தருவது. ஏனைய நெறிகள் பதி ஞானம் தருவதின்று என்பது உட்பொருள்.

(தொடரும்)

திருவருட்பிரகாச வள்ளலாரென்னும் சிதம்பர இராமலிங்க சற்குரு புலம்பற்கண்ணி*

தொகுத்தவர், திரு. P. P. துரைசாமி அவர்கள்,
கோயமுத்தூர்.

[மலர் 15, இதழ் 3-ன் தொடர்ச்சி]

உருகிமனங் கண்ணீர் — உடனலயப் பெற்றால்
வருமரண நீங்குமென்று — வாய்மலர்ந்த சற்குருவே. 111

நாதாந்த மோன — நவநிலையைக் காணவரும்
போதாந்தாந்தத் தெளிவைப் — போதித்த சற்குருவே. 112

காணும் புலாலுடம்பைக் — கற்பூர தீபமெனத்
தோணும் பதமருளுந் — தூயவென்றன் சற்குருவே. 113

எவ்வுயிருந்தம் உயிரென்று — எண்ணுகின்ற புண்ணியரை
யெவ்வுலகும் போற்றற் — கிசையுமென்ற சற்குருவே. 114

சுத்தம் பிரணவமுந் — துன்பமற்ற ஞானசித்தி
சித்தமகிழ்ந் தருளுஞ் — சிற்பரவென் சற்குருவே. 115

தொந்தத் தசியென்று — சொல்லுஞ் சுருதியுண்மை
பந்தநிலை நீங்கப் — பகர்ந்தருளுஞ் சற்குருவே. 116

காட்சிக்கண்ணிக் கவியில் — காணு மீதானநிலை
மாட்சியுற வைத்தருளு — மாதவவென் சற்குருவே. 117

இருவினை யொப்பென்னும் — எழில்நிலை யுற்றான்முன்
பெருவினைகள் பாறுமென்ற — பெற்றியருள் சற்குருவே. 118

மலபரி பாகமெனு — மாநிலையைப் பெற்றார்
பலமுறும் அஞ்ஞானமெலாம் — பாறுமென்ற சற்குருவே. 119

சத்திநிபாதப் பொருளாஞ் — சத்திபதியப் பெற்றான்
முத்திசித்தி வாய்த்தல் — முறையென்ற சற்குருவே. 120

(தொடரும்)

*திரு. ச. மு. கந்தசாமி பிள்ளையவர்கள் இயற்றியது.

சேக்கிழார் கவி வளம்

தொண்டர்சீர் பரவுவார்

மலர் 15. இதழ் 3-ன் தொடர்ச்சி

6. துணைபல இருப்போரைக் காப்பாற்றுவதினும் தனியே இருப்போரைக் காப்பாற்றுவதுதான் நினக்கு வழிவழி வந்த இயல்பாகும். ஆதரவுடையார்க்கு அருள் செய்வதினும், ஆதரவில்லார்க்கு அருள் செய்வதுதான் நினது இயல்பாகும் என்பாள், "அந்திமதிக் குழவிவளர் செய்யவேணி அணிமருகற் பெருமானே" என்றாள்.

இவ்வருமை படிப்போருக்கே நெஞ்சுருக்கும் போது, இதனைக் கேட்பார்க்கும் காண்பார்க்கும் நெஞ்சு எங்ஙனம் நெகிழ்ந்திருக்கும்? இவ் அழுகையொலி வழிபாடு செய்ய வந்த காழிப்பிள்ளையின் காதிலும் விழுந்தது. அறிவினன் ஆகுவது பிறிதின் நோய் தந்நோய்போல் போற்றலன்றோ? எழுந்தருளியது அக்குழந்தை. விடக்கொடுமை நீங்குமாறும் இவ்விடுக்கண் குழிநின்றேறுமாறும் பெருமானே! அருளாய் அருளாய் என்னும் அழுகைக் குரலுடன் அலமந்து கொண்டிருக்கும் அப்பெண்ணைக் கண்டார். "பயப்படேல் நீ! பருவரலும் நும் பரிசும் பகர்வாய்!" என முதற்கண் அருளினர்; அருளியதும் அக்கன்னிப்பெண்ணும் அதற்கு விடைதருகின்றாள். அக்கன்னிப் பெண்ணின் கதை மிக நீண்டது; விரிந்தது. ஆருத்துயரிலிருக்கும் அப்பெண்ணுக்குத் தனது கதை நீண்டதாயினும் அத்துணை விரிவாகச் சொல்லுதலும் இயலாது; வருத்தம் ஒரு புறமும், தனது எண்ணம் நிறைவேறாத தோல்வி ஒரு புறமும் வருத்தும் பொழுது என் செய்வாள்? எனினும், தனது நீண்ட நிகழ்ச்சிகளும், அதனால் இதுபொழுது

கிடைத்திருக்கும் துயரமும், தெரிவித்தாலன்றித் தனது துயரமும் தீராது என்ற நிலையும் இருக்கிறது. இந்நிலையில் சுருக்கமாகவும் விளக்கமாகவும் கூறுகின்றாள்.

'வைப்பூர் என்பது அண்மையிலுள்ள ஒரு கிராமம். அதில் வசிக்கும் தனவந்தன் தாமன் எனது தந்தையாவன். அவனுக்கு ஏழுபெண்கள். எனது தாய்மாமனும், அவனது மருகனும் ஆனவனே இவ்விடந் தீண்டப் பெற்றுள்ளான். இவ்வேழு பெண்களுள் மூத்த பெண்ணை இவனுக்குக் கொடுப்பதாகக் கூறிய எனது தந்தை, இவனினும் பெரிய இடத்து மாப்பிள்ளை கிடைக்க அவளை அவனுக்குத் தந்துவிட்டான். இது கண்டு தளர்ந்த தன் மருகனுக்கு அடுத்த பெண்ணைத் தருவதாகக்கூறி அமைதிப் படுத்தினான். அவனும் அதனை நம்பியிருக்க, அடுத்த பெண்ணிற்கும் தக்க இடம் கிடைத்துவிட அவளையும் அவனுக்குத் திருமணம் செய்து கொடுத்துவிட்டான். இங்ஙனமே ஒரு பெண்ணிற்குத் திருமணமானதும், மருமகன் தளரவும் மாமன் அடுத்த பெண்ணைத் தருவதாகக் கூறவும் இம்முறையே முதல் ஆறு பெண்களுக்கும் திருமணம் நடந்தேறியது. நான் ஏழாவது பெண். எனக்கும் தக்க இடம் வந்துவிடின், எனது தந்தை இவனை யொழியத் திருமணம் முடித்துவிடுவன் என எண்ணியும்; இவனும் ஆறு பெண்களில் ஒவ்வொருவரையும் தனக்குத் தருவதாக வாக்களித்துப் பிறர்க்குத் தந்தபோதும், தனது மாமன் சொல்லினை இன்னும் மறை மொழியாக நினைத்திருப்பதை எண்ணியும், தனது தந்தையின் தகவின்மையையும், இவனது பொறுமையையும் எண்ணி எனது தந்தைக்குச் சொல்லாது இவனை மணந்து நல்வாழ்க்கை பெறலாம் என எண்ணி இவனுடன் வந்தேன்; வந்த இடத்தில் இவனும் இந்நிலைக்கு ஆளாகிவிட்டான்' எனப்புகன்றனள்.

இக்கருத்தமைதியைக் கவிஞரின் வழிநின்று சுவைத்தல் தக்கது. ஆதலின், அப்பாடலை அப்படியே வைத்துச் சுவைப்போம்.

''வளம்பொழில்சூழ் வைப்பூர்க்கோன் தாமன் எந்தை
மருமகன்மற் றிவன்;அவற்கு மகளிர் நல்ல
இளம்பிடியார் ஒரேழுவர்; இவரில் மூத்தாள்
இவனுக்கென் றுரைசெய்தே ஏதி லானுக்(கு)

உளம்பெருகத் தனம்பெற்றுக் கொடுத்த பின்னும்
ஓரொருவ ராகஎனை ஒழிய ஈந்தான்
தளர்ந்தழியும் இவனுக்காத் தகவு செய்தங்(கு)
அவரைமறைத் திவன்தனையே சார்ந்து போந்தேன்.''

இதனுள் 'வளம் பொழில் சூழ் வைப்பூர்' என்பதால் தள்ளா விளையுளுடையது வைப்பூர் என்பதும், 'கோன் தாமன்' என்ப தால் அவ்வூரில் பெருங்குடி வணிகனாக வாழ்ந்து வருபவன் தாமன் என்பதும், அறியக்கிடக்கின்றது. 'எந்தை மருமகன் மற்று இவன்' என்பதால் ஈண்டு இறந்து கிடப்பவர் தனது தந்தைக்கு மருமகன் என்பது அறியக்கிடக்கின்றது. இவனை அழைத்து வந்த அத்துணையே யல்லது, இன்னும் திருமணம் செய்து கொள்ளவில்லையாதலின் தனக்கும் அவனுக்கும் உள்ள தொடர்பைக் குறியாது தனது தந்தைக்கும் அவனுக்கும் உள்ள தொடர்பைக் குறித்தாள். இறந்து கிடக்கும் அவன் தன்னருகில் உள்ளான்; தனது தந்தை ஊரில் உள்ளான் என்பதைக் குறிப் பாளாக 'இவன்' என்ற அண்மைச் சுட்டினால் இறந்து கிடப்பா னையும், 'அவற்கு' என்ற சேய்மைச் சுட்டினால் தனது தந்தை யையும் குறிக்கின்றாள். 'அவற்கு இளம்பிடியார் ஓர் எழுவர்' என்ற எளிய இனிய சொல்லால் தன்னுடன் பிறந்தார் எழுவர் எனக் குறிக்கின்றாள். இவர்களுக்குள் மூத்த பெண்ணை இவனுக்குக் கொடுப்பதாகச் சொல்லி அயலானுக்குக் கொடுத்து விட்டான் தந்தை. அதற்குக் காரணம் அவன் உளம் பெருகச் செல்வம் கிடைத்தமையே யாகும் என்பதை 'இவனுக்கு என்று உரை செய்தே ஏதிலானுக்கு உளம் பெருகத் தனம் பெற்றுக் கொடுத்தான்' என்ற சொல்லால் விளக்குகின்றாள். எனவே உரிய இவனுக்குக் கொடாது பிறனுக்குக் கொடுத்தமைக்குக் காரணம் செல்வமிகுதி கருதியே யன்றிப் பண்பு நலன், கல்வி நலன் ஆகியன கருதியன்று என்பதையும் குறிப்பாக இதனால் குறித்தாள். இவ்வடிகாறும் எழுவரில் மூத்தாளது திருமணம் வரை கூறப்பட்டுள்ள செய்தியை நன்கு விளக்கினாள். இவற்றை யெல்லாம் காழிப் பிள்ளைக்கு அறிவிப்பவள் ஏழாமவள் என்பதும் நாம் நன்கு அறிந்ததே யாகும். இனி இடைநின்ற ஐவரின் திருமணமும், அவர்களை இவனுக்குக் கொடாது பிறருக்குக்

கொடுத்த காரணமும் சொல்ல வேண்டும். அந்த ஐவகைத் திரு மணங்களையும் பத்தொன்பது எழுத்துக்களால் ஆய ஐவகைச் சொற்களால் முடிக்கின்ருள் அந்நங்கை. 'பின்னும் ஒரொருவராக ஏனை ஒழிய ஈந்தான்' என்பது அப்பகுதியாகும். இச்சுருங் கிய சொற்களால் மூத்தவளை அடுத்த ஐவரில் ஒவ்வொருவரை யும் இவனுக்கு என்றே உரை செய்தான்; பின் உளம் பெருகத் தனம் கிடைத்த காரணத்தால் பிறருக்குத் தந்து விட்டான் என்னும் கருத்து அமைந்து நிற்றல் காணலாம். ஐந்து திருமணங்களையும் ஐவகைச் சொல்லால் முடித்துக்காட்டும் அருமை நினைந்து நினைந்து மகிழ்தற்குரியதாகும். தெய்வக் கவிஞர்களுக்கன்றி இவ்வருமையும் எளிமையும் எவ்வாற்ருனும் இயலாத தாகும்.

இத்தகைய அருட் கவிஞர்கள் நம் தமிழகத்தில் தோன்றிய வர்கள். அவர்கள் வாழ்ந்த மண்ணில்தான் நாமும் வாழுகின் ரேம்; என நினையும் பொழுது மனம் பெரிதும் மகிழ்கின்றது. எனினும் அவர்களின் அருமையையும் பெருமையையும் முற்றிலும் நினைந்து மகிழவோ அன்றி வியக்கவோ போதியவாறு நாம் முன்வரவில்லையே என நினையுந்தொறும் நெஞ்சம் வருந்து கின்றது. மேல் நாடுகளில் இத்தகைய கவிஞர்கள் தோன்றி யிருப்பாராயின் இதுகாறும் எத்தனையோ விரிவுரைகள் விமரி சனங்கள், வியத்தகு பாராட்டுக்கள் மலிந்து கிடக்கும். தமிழ் மண்ணில் அவதரித்ததால் அதிலும் சமயத்துறையில் இறங்கிய தால் போதியவாறு அருமை பெருமைகளைப் பாராட்டுவார் இன்றி, மறைந்து கிடக்கும் மாணிக்கமாக அமைந்து விளங்கு கின்ருர்கள். மன்பதையினருக்கு இனியேனும் இத்தகைய அருட் கவிஞர்களின் அருமையும் பெருமையும் தெரிந்து சுவைக்குமாறு திருவருள் கூட்டுவிப்பதாகுக.

இதுகாறும் கூறப்பட்ட செய்தி தனது குடும்ப வரலாருகும். இனித்தான் ஏன் தனித்தும், தந்தையை மறைத்தும் இவனுடனே வரவேண்டும் என்ற பகுதியை விளக்குகின்ருள். இன்றைய உலகில் பேசப்படுவது போல காதல் என்ற பெயரால் காமம் நலிய அவனுடன் வந்தவள் அல்லள் அவள். மிகவும் தூய்மையும் வாய்மையும் உடையவள். மருமகனுக இருக்கும் சுற்றத்தவனை

விடுத்துக் கேவலம் பணத்திற்காக ஒருவர் இருவர் அல்ல ஆறு பெண்களையும் வஞ்சித்துப் பிறர் பிறருக்கே திருமணம் செய்து கொடுத்த தன் தந்தையின் தகவின்மையைக் கருதுகின்முள். 'எங்கள் வீட்டுப் பெண்களை மறந்து விடு,' 'வேறு பிற இடத்தில் திருமணம் செய்து கொள்' என்று கூறியிருந்தாலும் குற்ற மில்லை. 'அழுத பிள்ளைக்கு வாழைப்பழம் காட்டுவது போல்' ஒவ்வொருவரையும் முன்னர் தருவதாகக் கூறிப் பின்னர் வஞ்சிக்கும் தனது தந்தையின் பெருங் கொடுமையை நினைக் கின்முள்; அதே சமயத்து ஆறு பெண்களை வஞ்சனையாகப் பிறருக்குக் கொடுத்த போதும், 'குற்றம் பார்க்கிற் சுற்றம் இல்லை' எனக் கருதியும், சுற்றம் விடக்கூடாது என்று நினைந் தும் பொறுமையாக இருக்கும் அம்மருகனது நிலைமையையும் நினைந்து பார்க்கின்முள். அது 'தகவின்று' எனநினைந்து தாய் தந்தையரை மறைத்து அவனுடன் புறப்படுகின்முள். இங்ஙனம் புறப்பட்டு வருதற்கும், தானே காரணமாகவும் நிற்கின்முள். இவற்றுக்கெல்லாம் காரணம் அவளது தகவே யன்றிக் கேவல மான சிற்றின்ப நுகர்ச்சி யன்று என்பதைத் "தளர்ந்தழியும் இவனுக் காத் தகவு செய்து அங்கு அவரை மறைத்து இவனுடனே சார்ந்து போந் தேன்" எனக் கூறுகின்முள். இங்குத் 'தகவு செய்து' என்ற சொல் இத்துணை யருமையையும் தன்னகத்தே கொண்டு நிற்கின்றது. இவள் தகவினை, வாளரவு தீண்டவும் தான் அவனைத் தீண்டாது அவனருகே வீழ்ந்து அலமந்த போதும் நன்கு தெரியலாம். தீண்டத்தகாத, தீண்ட வேண்டாத பாம்பும் அவனைத் தீண்டி விட்டது. ஆனல் இன்னும் பலரறியத் திருமணமாகாததால் அவன் இறந்த பின்னும்கூடத் தான் தீண்டுதல் தகவில்லை என நினைந்தாள். இதனைக் கவிஞர் "வாளரவு தீண்டவும் தான் தீண்ட கில்லாள்" என்னும் அருமை வாக்கினுல் விளக்கு கின்முர்.

இதுதான் தான் தாய் தந்தையரை விடுத்து இவனுடன் போந்ததற்குக் காரணமாகும்; மற்றிவனும் வாளரவு தீண்ட மாண்டதால் நான் மறிகடலிற் கலங்கவிழ்த்தாற் போல் நின்றேன்; எனத் தனக்குப் புகுந்த தீங்கையும் சுருங்கக் கூறுகின்முள். இவள் உள்மெலிவு கண்ட காழிப்பிள்ளையார்

"சடையாய் எனுமால்' எனும் திருப்பதிகம் பாடி இறந்தவனை எழுப்பி அவளுக்கு மணம் புணரும் பெருவாழ்வு வகுத்துக் கொடுக்கின்றார்.

நீ யார்? எனக் கேட்ட இராமனுக்கு அனுமன் அளித்த விடையையும், பருவரலும் பரிசும் பகர்வாய் எனக் கேட்ட காழிப் பிள்ளையாருக்கு இவள் அளித்த விடையையும் ஒத்து நோக்கச், சுருங்கச் சொல்லி விளங்க வைத்தலில் இருபெருங் கவிஞர்களும் ஒருவரை யொருவர் விஞ்சியவராய்ச் சென்று நமது நெஞ்சத்தை அள்ளுவதைக் காணலாம்.

இது போன்றே "யாரையோ நீ மடக்கொடியோய்'' என்ற பாண்டியனுக்குக் கண்ணகி கூறிய விடையும் இதனோடு ஒப்பிட்டு மகிழ்தற் குரியதாகும்.

ராகம் : சங்கராபரணம் ஆதி தாளம்.

பல்லவி

கந்தனே உன்னை நினைக்க நினைக்கக்
களிக்குமென் உள்ளமே (செந்தில் பதிவாழ்).

அனுபல்லவி

மனயிருள் நீங்க உன் திருமலரடி
என்றும் துணை யருள்வாய் (கந்தனே)

சரணம்

ஆகமப் பொருளே என்னை
ஆதரிக்கும் திருவே
அன்பர் உளத்துறையும் அமுதே
ஆறுமுகமான சிவகுருவே. (கந்தனே)

திருமதி. சு. விஜயாம்பிகை,
ஸ்ரீவைகுண்டம்.

SAINT APPAR AND HIS HYMNS

அப்பர் சுவாமிகளின்
அற்புதத் திருப்பதிகங்கள்

ஆங்கில மொழிபெயர்ப்பு

திரு. T. B. சித்தலிங்கம் அவ:ர்கள், M. A.,
தமிழ் விரிவுரையாளர்,
காசி இந்துப்பல்கலைக்கழகம், காசி.

திருமறைக்காடு – திருக்குறுந்தொகை – 5-ஆம் திருமுறை

பண்ணின் நேர்மொழி யாளுமை பங்கரோ
மண்ணி னூர்வலஞ் செய்ம்மறைக் காடரோ
கண்ணி னுலுமைக் காணக் கதவினைத்
திண்ண மாகத் திறந்தருள் செய்ம்மினே.

"The musical-voiced Uma shares your body. People circle round and worship you, the Lord of Tirumaraikkadu. Graciously open the door so that we may see you".

St. Tirugnanasambandar prayed to Lord and immediately the door closed. But St. Appar had to pray for a long time before the door opened. This difference made St. Appar think over and he was depressed. That night Lord Siva appeared in his dream and bade him to follow Him to Tiruvaymur. St. Appar suddenly woke up and followed the figure which led him. St. Tirugnanasambandar heard about this and he also followed his elder contemporary. There appeared a temple before them and the "Guide" disappeared in it. Both the saints were blessed with the presence of God.

(தொடரும்)

அரிசிற்கரைப்புத்தூர்

தேவார மணி, திரு. சட்டையப்பன் அவர்கள்.

திருப்பனந்தாள்.

———o———

'புத்தூர்' என்னும் பெயரினையுடைய தலங்கள் பாண்டிய நாட்டுப்பதிகளான பதினான்கில் ஆறாவது தலமாக விளங்கும் 'புத்தூர்' ஒன்று; சோழநாட்டுக் காவிரியின் தென்கரைத்தலங்களில் அறுபத்தாறாவது தலமாக விளங்கும் 'புத்தூர்' ஒன்று; அதே சோழநாட்டின் காவிரித் தென்கரைத் தலங்களில் தொண்ணூற்றேழாவது தலமாக விளங்கும் 'புத்தூர்' ஒன்று, ஆக மூன்று தலங்கள் இருக்கின்றன.

முதலாவதாகக் கூறிய 'புத்தூர்' திருப்புத்தூர் என்ற பெயரில் திருமுறைகள் வழங்கும்.

'திங்களோடு திளைக்குந் திருப்புத்தூர்க்
கங்கை தங்கு முடியார்'

என்று புத்தூர் ஈசனைப் பாடும் சம்பந்தரது வாக்கும்,

'திருந்துவயல் புடைதழுவு திருப்புத் தூரில்
திருத்தளியான் காண்'

என்ற அப்பரடிகளது வாக்கும் உறுதிப்படுத்துவனவாம். புத்தூர் ஈசனுக்கு மற்றோர் பெயர் 'திருத்தளிநாதர்' என்பதாகும்.

இரண்டாவது, முன்கூறியபடி காவிரியின் தென்கரைத் தலமாகிய அறுபத்தாறாவது தலம்; அதுவே இங்குப் பேசுவதற்கென்று எடுத்துக் கொண்டதால் மூன்றாவது குறிப்பிட்ட 'புத்தூரை' நோக்குவோம்.

தொண்ணூற்றேழாவது தலமாகக் குறிப்பிட்ட 'புத்தூர்' கடுவாய்க்கரைப் 'புத்தூர்' என்பதாகும். ஆண்டாங் கோயில்

எனவும் வழங்கும். கடுவாய் என்பதோர் நதி—குடமுருட்டியாறு; அவ்வாற்றின் கரையில் உள்ளதால் அப்பெயர் பெற்றது.

"......................
இரக்கமாகி அருள்புரி யீசனைத்
திரைக்கொள் நீர்க்கடு வாய்க்கரைத் தென்புத்தூர்
இருக்கு நாதனைக் காணப்பெற் றுய்ந்தேனே"

என்று அப்பரடிகள் பாடுவதிலிருந்து இந்தப்புத்தூர், கடுவாய் (குடமுருட்டி) ஆற்றின் தென்கரையிலிருப்பதாக அறிய முடிகின்றது.

இனி, அரிசிற்கரைப் புத்தூரைக் காண்போம். அரிசிலாற்றின் தென்கரையில் இருக்கும் 'புத்தூர்' ஆனதால் அரிசிற்கரைப்புத்தூர் என்னும் பெயர் பெற்றது. இது அழகார் புத்தூர் என வழங்கப் பெறுகின்றது. இத்தலம் இப்படியுள்ள வனப்பை-வண்ணத்தை,

"அன்னம் படியும் புனலார் அரிசில் அலைகொண்டு
பொன்னும் மணியும் பொருதென் கரைமேற் புத்தூரே."

"நாவால் நாதன் நாமம் ஓதி நாள்தோறும்
பூவால் நீரால் பூசுரர் போற்றும் புத்தூரே."

என்றெல்லாம் சம்பந்தப் பெருமானும்,

"கலைக் கொம்புங்கரி மருப்பும் மிடறிக்
கலவம் மயிற் பீலியுங் காரகிலும்
அலைக்கும் புனல் சேர்அரிசில் தென்கரை
அழகார் திருப்புத்தூர் அழக னீரே."
"கழைக் கொள் கரும்புங்கதலிக் கனியும்
கமுகின் பழுக்காயுங் கவர்ந்து கொண்டிட்
டழைக்கும் புனல்சேர் அரிசிற் றென்கரை
அழகார் திருப்புத்தூர் அழகனீரே."

என்றெல்லாம் சுந்தரமூர்த்தியும் பாடுகின்றனர்.

அரதைப் பெரும்பாழி, திருச்சேறை, திருநாலூர், நறையூர் முதலிய தலங்களை வழிபட்டுக் கொண்டு ஞானசம்பந்தர் இத்தலத்தையடைகின்றார்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் நறையூர் சித்தீச்சரத்தைப் பணிந்து, பெருந் தொண்டர்களின் அரும்பெரும் அன்பின் அழைப்பை ஏற்று மானும் மழுவும் ஏந்திய கரத்தோடுடைய பெருமானை வணங்கும் விருப்பமுடையராய்த் தொண்டர்கள் புடைசூழ அரிசிற்கரைப்புத்தூர் வந்து சேர்கின்றார்.

அப்படித் தங்கிய நாளில் அவர் பாடிய பதிகம் 'மலைக்கு மகள் அஞ்ச மதகரியை உரித்தீர்' எனத் துவங்கும் இந்தளப்பண்.

இப்பதிகத்தில், புத்தூர் மேய புனிதராம் சிவபெருமான் 'முன் ஒரு அடியவர்க்கு அருளிய திறம் ஒன்றுண்டு—' அதைப் போற்றிசைத்து மகிழ்கின்றார்.

அந்த அடியவர் யார்? அவர்தான் 'புகழ்த்துணை'யார்!

'புனிதனார்முன் புகழ்த் துணையார்க் கருளுந் திறமும் போற்றிசைத்து....'' என்று சேக்கிழார் குறிப்பிடுகின்றார்; புகழ்த் துணையார்க்குச் சிவபெருமான் அருளிய திறத்தை அவனியெல்லாம் அறிய அடியெடுத்துப் போற்றிசைத்தவர் சுந்தரர்.

"புடைசூழ்ந்த புலியதள்மேல் அரவாட ஆடி
பொன்னடிக்கே மனம்வைத்த புகழ்த்துணைக்கும் அடியேன்"

என்பது அவர் போற்றி செய்யும் திருத்தொண்டத் தொகை.

சைவ சமய அடியார்களுள் சிவப்பிராமணர்கள் எனப் பேசப் படுபவர் இருவர்; ஒருவர் 'புகழ்த்துணையார்' மற்றொருவர் 'முப் போதும் திருமேனி தீண்டுவார்'. வேதத்தின் பொருளாய் நிற்கும் ஈசனை எண்ணிய காலமான மூன்று வேளையிலும் அன்பின் எழுச்சியால் அர்ச்சிக்கும் மறையவர் சிவப்பிராமணர்.

"எப்போதும் இனியபிரான் இன்னருளால் அதிகரித்து
மெய்ப்போத நெறிவந்த விதிமுறைமை வழுவாமே
அப்போதைக் கப்போதும் ஆர்வமிகும் அன்பினராய்
முப்போதும் அர்ச்சிப்பார் முதற்சைவ ராம்முனிவர்."

என்ற சேக்கிழார் பெருமான் விளக்கம் சிவப்பிராமணரது இலக் கணத்தை வகுத்துக் காட்டும்.

அதோடு மட்டுமல்ல, சிவவேதியர்க்கே உரியன திருத்தொண்டின் விரும்பிய அர்ச்சனைகள் என்பதைத் தெளிவாக எடுத்துக் கூறுகின்றார்.

“ தெரிந்துணரின் முப்போதுஞ் செல்காலம் நிகழ்காலம்
வருங்காலம் ஆனவற்றின் வழிவழியே திருத்தொண்டின்
விரும்பிய அர்ச்சனைகள் சிவவேதியர்க்கே உரியனஅப்
பெருந்தகையார் குலப்பெருமை யாம்புகழும் பெற்றியதோ?”

என்பதே அந்தத் தெளிவு.

அத்தகைய சிவப்பிராமண குலத்தில் தோன்றியவர் புகழ்த் துணையார். சிவலிங்க பூசனைசெய்து முத்தியடைந்த அடியார்கள் முப்பதுபேர். அந்தப் பட்டியலில் இடம் பெற்றவர் ‘புகழ்த்துணை’ நாயனார். அவர் அகத்தடிமை செய்தவர்; அந்த நிலையில் அவர்க்கு ஒப்பாரும் மிக்காரும் ஒருவருமில்லை யென்ற நிலையில் நின்றவர். இதை,

“ அருவரைவில் லாளிதனக்கு அகத்தடிமை யாம்அதனுக்கு
ஒருவர்தமை நிகரில்லார் உலகத்துப் பரந்தோங்கிப்
பொருவரிய புகழ்நீடு புகழ்த்துணையார் ”

என்று சேக்கிழார் பேசுகின்றார்.

புத்தூர் அமர்ந்த பிரானை நாள்தோறும் அரிசிற்புனல் கொண்டு வந்து நீராட்டித் தத்துவத்தோடு வழிபட்டு வருகின்றார் புகழ்த்துணை.

இப்படியுள்ள நாளில் பஞ்சம் ஏற்பட்டது. பசி, பட்டினி அவர்பால் அடைக்கலம் கொண்டது. அப்படியிருந்தும் ‘எம் பிரானை நான் விடமாட்டேன்,’ என்று இராப்பகல் பூவொடு நீர் சுமந்தேத்தி வழிபாடு முட்டாது செய்து வருகின்றார். இப்படி மாலும் அயனும் அறியாப் பிரானும் சிவனைத் திருமஞ்சனம் ஆட்டும் பொழுது மிகுந்த பசிப்பிணியால் வருந்தி நிலைதளர் வெய்துகின்றார்; மஞ்சனக் குடத்தைத் தூக்கி ஆட்ட (அபி சேகிக்க) முடியாமல் சிவனாரின் முடிமேல் போட்டு விடுகின்றார்; அந்த நிலையில் அவர் அயர்வுகொண்டு விடுகின்றார். சங்கரனது அருளால் அவருக்குத் துயில்வந்து விடுகின்றது. அப்படியே

செய்வதொன்று மறியாமல் உறங்கிவிடுகின்றார். அப்போது அங்கணனாகிய சிவபெருமான், "அருந்துணவு மங்கிய நாட்கழி வளவும் வைப்பது நித்தமும் ஒருகாசு இங்குனக்குநாம்" என்று அருள்புரிந்தார் என்பதாகப் பாடுகின்றார் சேக்கிழார்.

துயில் நீங்கி எழுந்த புகழ்த்துணை, பெற்றம் உகந்தேறும் பிரானருளால் பீடத்தின்மேல் இருந்த ஒருகாசைப் பெற்றுக் கொண்டார். பஞ்சம் தீருமளவும் பீடத்தின்கீழ் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு காசாகப் பெற்று மெய்யடிமை பூண்டொழுகி மேலாம் சிவகதி யடைந்தார். அவர் சிவபதங் குறுகிய நாள் ஆவணிமாத ஆயில்ய நட்சத்திரமாகும்.

'துறக்கப்படாத உடலை' எடுத்த மக்கட் பிறவிசெய்ய வேண்டிய மகத்தான செயலொன்று உண்டாயின் அது 'பிற வியை'த் தோற்றுவிக்கும் இறையை அறிந்து அடைய முயல் கின்ற செயலேயாம்.

அது 'தொண்டு' என்பதில் அடங்கும் என்பது மிகையன்று. 'என் கடன் பணிசெய்து கிடப்பதே' என்பது அப்பமூர்த்திகளின் அருள்வாக்கு.

தொண்டுசெய்ய முற்படும்போது எவரும் தம்முடைய பொருளையும், தம் உடலை-உயிரைத் தியாகம் செய்ய விழைந்து நிற்பது மரபு.

சிவத்தொண்டு செய்வோர் பொருளை - உடலை - உயிரைத் தியாகம் செய்வதில் ஒருபோதும் சளைக்கமாட்டார்கள். இளைக் காத இளமையின் தெளிவோட்டமாய 'இறைபணி – தொண்டில்' சிறந்தவர்கள் பலர் பல காலத்தில் பல்வேறு ஊர்களில் பல இனத்தவராகத் தோன்றிச் செயற்கரிய செயல்களைச் செய்து வாழ்ந்திருந்தார்கள். மக்களின் மனநிலையை மங்காத ஒளி விளக்க நிலையமாக்கிய பெருமையைத் திருத்தொண்டர்கள் ஏற்று நடத்தி யுள்ளார்கள். அந்த இனத்திலோர் மாணிக்கம் இப்போது நம்மிடையே இந்தக் கட்டுரையில் ஒளி வீசுகின்றது.

ஒளியிட்டி வந்த அம்மாணிக்கம் புகழ்த்துணையை,

"அலந்த அடியான் அற்றைக் கன்றோர் காசெய்திப்
புலர்ந்த காலை மாலை போற்றும் புத்தூரே"

என்று ஞானசம்பந்தப் பெருமான் காந்தாரப் பண்ணில் பாடுகின்றார்.

"அகத்தடிமை செய்யும் அந்தணன் றான்அரி
சிற்புனல் கொண்டு வந்து ஆட்டுகின்றான்
மிகத்தளர் வெய்திக் குடத்தையும் நும்முடி
மேல் விழுத்திட்டு நடுங் குதலும்
வகுத்தவனுக்கு நித்தற் படியும்
வருமென் றொரு காசினை நின்றநன் றிப்
புகழ்த்துணை கைப்புகச் செய்துகந்தீர்
பொழிலார் புத்தூர்ப்புனித னீரே."

என்று சுந்தரமுர்த்தி சுவாமிகள் இந்தளப் பண்ணில் அவருடைய (புகழ்த் துணையாருடைய) வரலாற்றையே பாடுகின்றார்.

'புகழ்த்துணை' நாயனாரின் திருத்தோற்ற முற்றருளிய தலமாம் அரிசிற்கரைப்புத்தூர் கும்பகோணம் புகைவண்டி நிலையத்திலிருந்து தென் கிழக்காக நாலரைக் கல்லில் இருக்கிறது. இறைவரின் திருநாமம் படிக்காசு வைத்த பரமர்; அம்மையின் திருநாமம் அழகம்மை.

"திருப்புத் தூரனைச் சிந்தை செயச்செயக்
கருப்புச் சாற்றிலும் அண்ணிக்குங் காண்மினே"

என்ற அப்பரது வாக்கைச் சிந்திப்போமாக!

முற்றும்

HYMNS OF THE TAMIL SAIVITE SAINTS

BY

F. KINGSBURY, B. A. (Madras)

AND

G. E. PHILLIPS, B. A. (Lond.), M. A. (Oxon.)

[மலர் 15, இதழ் 3–ன் தொடர்ச்சி]

II

THIRUNAVUKKARASU SWAMI

(More commonly referred to as APPARSWAMI)

41. சங்கநிதிபதுமநிதி யிரண்டுந்தந்து
தரணியொடுவானாளத்தருவரேனு
மங்குவாரவர்செல்வமதிப்போமல்லோ
மாதேவர்க்கேகாந்தரல்லராகில்
அங்கமெலாங்குறைந்தழுகுதொழுநோயரா
யாவுரித்துத்தின்றுழலும்புலையரேனுங்
கங்கைவார்சடைக்கரந்தார்க் கன்பராகி
லவர்கண்டீர்நாம்வணங்குங்கடவுளாரே.

41. Though they give me the jewels from Indra's abode,
Though they grant me dominion o'er earth, yea o'er heaven,
If they be not the friends of our lord Mahadev,
What care I for wealth by such ruined hands giv'n?
But if they love Siva, who hides in His hair
The river of Ganga, then whoe'er they be,
Foul lepers, or outcastes, yea slayers of kine,
To them is my homage, gods are they to me.

Reproduced with the kind permission of Oxford University Press, Calcutta.

(N.B. Copies available for sale at the above Press.)

திருவருட்பயன் – தெளிவுரை

பண்டித வித்துவான், சைவப் புலவர், சித்தாந்த நன்மணி,
திரு. கு. சுந்தரமூர்த்தி அவர்கள்,
தமிழ்ப் பேராசிரியர், செந்தமிழ்க் கல்லூரி, திருப்பனந்தாள்,

(மலர் 15. இதழ் 3-இன் தொடர்ச்சி)

6. அறியும் நெறி.

அஃதாவது உண்மைப் பொருளை அறியும் முறைமை எனப் பொருள்படும். மேல் அருளே உருவாய குருமூர்த்தியின் இன்றியமையாமையைக் கூறினர்; ஈண்டு அவ்வருட்குருவால் உணர்த்தப்படும் உண்மைப் பொருளை அறியும் முறைமையை இவ்வதிகாரத்துக் கூறுகின்றார் ஆகலின் மேலையதனோடு இயையுடைத்தாயிற்று.

51. நீடும் இருவினைகள் நேராக நேராதல்
கூடும்இறை சக்தி கொளல்.

(தெ – ரை) ஒன்றை யொன்று ஒவ்வாது வளர்ந்து வரும் நல்வினை தீவினை ஆகிய இரண்டின் கண்ணும் ஒத்த உவர்ப்புத் தோன்றி, அவற்றின் பயனையும் சமமாகக் கருதப்படும் பொழுதே இறைவனது திருவருட்சத்தியும் உயிரிற் பதிந்து அதனைப் பற்றிக் கொள்ளுதல் நிகழும் என்பதாம்.

இருவினைகள் நேராக–நல்வினை தீவினை என்னும் இருவினையின் கண்ணும் உவர்ப்புத் தோன்றுதல். நேராதல்–அவற்றைச் சமமாகக் கருதும் நிலை ஏற்படுதல். 'நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானோ இதற்கு நாயகமே' என நினைந்து வாழ்தலே இவ்வனுபவமாகும். இந்நிலை உயிர்கட்கு ஏற்பட்டாலன்றி இறைவன் குருவாக எழுந்தருளி வந்து தனது அருளைப் பதிவித்தல் கூடாது என்பதாம்.

"உணக்கி லாததோர் வித்து மேல்விளை
யாம லென்வினை யொத்தபின்
கணக்கி லாத்திருக் கோலம் நீவந்து
காட்டி னுய்கழுக் குன்றிலே"

என்னும் திருவாசகமும்,

"புண்ணிய பாவம் இரண்டுள பூமியில்
நண்ணும் பொழுது அறியார்சில ஞானிகள்
எண்ணி யிரண்டையும் வேரறுத்து அப்புறத்து
அண்ணல் இருப்பிடம் ஆய்ந்து கொள்வீரே."

என்னும் திருமந்திரப் பாடலும் இக்கருத்தினை விளக்கி நிற்றல் காண்க.

52. ஏகன் அனேகன் இருள்கருமம் மாயையிரண்(டு)
ஆகஇவை ஆ(று)ஆதி யில்.

(தெ – ரை) ஒருவனாகிய இறைவனும், அளவில்லாதன வாகிய உயிர்களும், இருள்வடிவாகிய ஆணவ மலமும், வினையும் சுத்தம், அசுத்தம் ஆகிய இருவகை மாயையும் ஆகிய இப் பொருள்கள் ஆறும் அநாதியாகவே உள்ளனவாம்.

'ஒருவனே தேவன்' என்புழி ஒன்று என்றது ஒன்றேகாண் என்பவாகலின் இறைவன் ஒருவனேயாவன் என்பது விளங்கும். 'பசுப்பல கோடி உரைசேரும் எண்பத்து நான்கு நூறுயிரமாம் யோனிபேதம்' என்பவாகலின் உயிர்கள் பல என்பது நன்கு விளங்கும். இருள் கருமம் மாயை என்பன மும்மலங்களாம்.

சுத்தமாயை – சுத்த உலகிற்குக் காரணமாய்த் துன்பத் தோடு விரவுதலின்றி இன்ப மாத்திரையே பயப்பது. அசுத்த மாயையும் பிரகிருதி மாயையையும் வியாபித்து நிற்பது.

அசுத்தமாயை – மலகன்மங்களோடு விரவி இன்ப துன்பம் இரண்டும் பயப்பது. அசுத்த உலகிற்குக் காரணமாய் நிற்பது சுத்தமாயையின் கீழாய் அடங்கி நிற்பது.

"பலவயி னானும் எண்ணுத்திணை விரவுப்பெயர்
அஃறிணை முடிபின செய்யு ளுள்ளே."

என்ற இலக்கணத்தால் அஃறிணை முடிபு கொண்டது. இது திணைவழுவமைதி.

53. செய்வானும் செய்வினையும் சேர்பயனும் சேர்ப்பவனும்
உய்வான் உளனென்(று) உணர்.

(தெ - ரை) வினைகளைச் செய்கின்றவனும், அவனால் செய்யப்படும் நல்வினை தீவினைகளும், அவற்றின் பயனாகிய இன்ப துன்பங்களும், அவற்றை ஊட்டுவிக்கும் இறைவனும், என்னும் இந்நான்கினையும், உயிராகிய நீ உய்தற்பொருட்டு உணர்வாயாக என்பதாம்.

இந்நான்கும் உளவென உணராவிடில் தான் அல்லாததனைத் தான் என்றும், தன்னுடையது அல்லாததைத் தன்னுடைய தென்றும் கருதும் யான் எனது என்னும் செருக்கு வளரும். அது வளரவே பிறவித் துன்பமும் இடையறாது வளரும். ஆதலால்தான் உயிர்கள் உய்வதற்காக இந்நான்கினையும் உணர வேண்டும் என்று கூறுகிறார். உய்வான் – உய்வதற்காக. உளன் என்று உணர்– (இந்நான்கும்) உண்டு என்று உணர்வாயாக. இங்ஙனமன்றி இத்தொடருக்குத் தன்னை ஈடேற்றுதற்காக (இந்நான்கையும்) பொருந்துபவன் ஆன்மா என்றுரைப்பாரும்[1] உளர். இனி 'உய்வானும்' என்று பாடமோதி மோட்சத்தை அடைகிறவனும் என்றுரைப்பாரும்[2] உளர். இவர் கருத்தின்படி 'செய்வானும் உய்வானும்' என்ற இருசொற்களும் புருடனாகிய ஒருவனையே குறிக்கின்றன. இக்கருத்து ஆய்தற்குரியது.

" செய்வினையும் செய்வானும் அதன்பயனும் கொடுப்பானும்
மெய்வகையால் நான்காகும் விதித்தபொருள் எனக்கொண்டே
இவ்வியல்பு சைவநெறி யல்லவற்றுக் கில்லையென
உய்வகையால்பொருள்சிவன்என்றுஅருளாலேஉணர்ந்தறிந்தார்."

எனவரும் சேக்கிழார் வாக்கின் கருத்தினை இத்திருவருட்பயன் முகந்து நிற்றல் காண்க.

---

[1] சு. சிவபாத சுந்தரம். [2] சிந்தனையுரை.

54. ஊன்உயிரால் வாழும் ஒருமைத்தே ஊனேடுஉயிர்
தான்உணர்வோ(டு) ஒன்றும் தரம்.

(தெ – ரை) உடம்போடு கூடிய உயிர் திருவருளோடு கூடி ஒன்றுபட்டு வாழும் முறைமை, உடம்பு உயிரோடு கூடி ஒன்றுபட்டு வாழும் முறைமை போன்றதாம்.

உடல் இயக்கத்திற்குத் திருவருள் காரணமாதல்போல உயிரியக்கத்திற்குத் திருவருள் காரணம் என்பது இதன் கருத்தாகும். உணர்வு–திருவருள். ஒன்றுந்தரம் - ஒன்றுபட்டு நிற்கும் முறைமை.

55. தன்நிறமும் பன்னிறமும் தானும்கல் தன்மைதரும்
பொன்நிறம்போல் மன்நிறம்இப் பூ.

(தெ – ரை) பளிங்குக்குரிய தன்மையாகிய தன் நிறத்தையும் தன்னைச் சேர்ந்த பொருள்களின் பல்வேறு நிறங்களையும் காட்டுதற்குக் கதிரவன் காரணமாதல் போல இவ்வுலகில் இறைவனது திருவருளும் அமைந்துளது என்பதாம்.

பளிங்கு தன் நிறத்தைக் காட்டுதற்கும் தன்னைச் சார்ந்த பொருள்களின் நிறத்தைக் காட்டுதற்கும் கதிரவன் ஒளி துணையாதல் போல, உயிர்க்கும் தனது இயல்பாகிய வீடு அடைதற்கும் சார்ந்ததன் வண்ணமாக அமைந்து நிற்கும் பிறவியில் உழல்தற்கும் இறைவனது திருவருளே துணையாகின்றது என்பது இதன் கருத்து. இதனுல் பெத்தம், முத்தி இரண்டிற்கும் இறைவன் அருள் இன்றியமையாததாதல் தெளியலாம். கல் (தனது) தன்மையாகிய தன்னிறமும், தான் ஆம் பன்நிறமும் தருதற்கும் பொன் நிறம் (காரணமாதல் போல) இப்பூவின் மன் நிறம் (உளது) எனக் கூட்டுக.

கல் – பளிங்கு. தன் நிறம் – வெண்மை நிறம். பன்னிறம் – சார்ந்தவற்றின் நிறம். பொன்நிறம் – கதிரவன் ஒளி. இப்பூ – இவ்வுலகில். மன்நிறம் — இறைவனது திருவருள்.

(தொடரும்)

நீதிநெறி விளக்கம்

உரைநடையும், ஆங்கில மொழிபெயர்ப்பும்*

பாலகவி வயிநாகரம்,
திரு. வே. இராமநாதன் செட்டியார் அவர்கள்,
தேவகோட்டை.

[மலர் 15. இதழ் 3-ன் தொடர்ச்சி]

இசையாத போலினும் மேலையோர் செய்கை
வசையாகா மற்றையோர்க் கல்லால்—பசுவேட்டுத்
தீயோம்பி வான்வழக்கம் காண்பாரை ஒப்பவே
ஊனோம்பி ஊன்தின் பவர்.

தமது உடலைப் பாதுகாக்க வேண்டி ஊனைத் தின்பவர்கள், உலக நலம் கருதிப் பசுவைப் படுத்து வேள்வித் தீயை வளர்த்து மழைப் பெயலை உண்டாக்குபவர்களாகிய ஆக்குவதற்கும் அழிப்பதற்குமுரிய ஆற்றல் படைத்த தவ வலிமை உடைய மேலோர்களை ஒப்பார்களோ? சில வேளைகளில் உயர்ந்தவர்களுடைய செயல்கள் பொருந்தாதன போலக் காணப்பட்டாலும் அவை நற்பயன் விளைக்குமாததால் குற்றம் உடையனவாகா. கீழோர்களிடத்திலேயே அச்செயல் குற்றமுடையதாக இருக்கும்.

Renunciation - of being within bounds.

Though certain acts of the great may seem unacceptable, they are in no way to be reproved, as for example, are those who eat flesh to fatten their bodies equal to those, who perform animal sacrifice to bring down rain? 97

எவரெவர் எத்திறத்தர் அத்திறத்த ராய்நின்(று)
அவரவர்க் காவன கூறி—எவரெவர்க்கும்

* Translated by: Sri P. Mutharasu M. A., B. T., Head of the Tamil Department, Sri K. G. S. Arts College, Arulnandi Nagar.

உப்பாலாய் நிற்பமற்(று) எம்முடையார் தம்முடையான்
எப்பாலும் நிற்ப தென.

உயிர்கள் அனைத்தையும் ஆளாக உடையவனாகிய ஆண்டவன், எல்லா இடங்களிலும் நிறைந்து நிற்பதைப் போல எம்மை ஆளாக உடையவராகிய ஞானாசிரியர் யார் யார் எந்த எந்தத் தகுதியினரோ அவரவர்க்கு அந்த அந்தத் தகுதியினராயிருந்து அவ்வத்தகுதிகளுக் கேற்ற உபதேசங்களைச் செய்து அவர்கள் அனைவருக்கும் அப்பாற்பட்டவராய் விளங்குவார்.

Renunciation - Being detached in attachment

The sages who are our masters, identify themselves with all kinds of people and adapt their instructions suitable to the disposition and receptivity of each one of them, but at the same time, remain detached and far above them all, just as God is omnipresent and transcendent. 98

மெய்யுணர்ந்தார் பொய்ம்மேற் புலம்போக்கார் மெய்யுணர்ச்சி
கைவருதல் கண்ணுப் புலங்காப்பார்—மெய்யுணர்ந்தார்
காப்பே நிலையாப் பழிநாணல் நீள்கதவாச்
சேப்பார் நிறைத்தாழ் செறித்து.

உண்மையை உணர்ந்த ஞானிகள் பொய்யாகிய உலகப் பொருள்கள்மேல் தமது பொறிகளைச் செல்லவிடமாட்டார்கள். மெய்யுணர்வின் நிலைபேற்றையே கருத்தாகக் கொண்டு ஐம் புலன்களையும் தீய வழிகளில் செல்லாதபடி காத்துக் கொள்ளுவார்கள். அம் மெய்யுணர்வாளர்கள் ஐம்பொறிகளைக் காத்தலே வாயில் நிலையாகவும் பழியஞ்சுதலே நீண்ட கதவுகளாகவும் மன நிறையாகிய தாழ்க்கோலை இட்டுத் தங்கியிருப்பார்கள்.

Renunciation - Attaining Wisdom

The great who have realised the truth never indulge their senses in things transient, but endeavour steadfastly to guard their senses, holding the attainment of true wisdom ever in view. In this endeavour,

they make the guarding of their senses as the door-post, the fear of infamy as the long door and the fortitude of mind as the strong bolt to secure it. 99

சற்றுத் துறைபோய காதலற்குக் கற்பினுள்
பெற்றுக் கொடுத்த தலைமகன்போல்—முற்றத்
துறந்தார்க்கு மெய்யுணர்வில் தோன்றுவதே இன்பம்
இறந்தவெலாம் துன்பமலா தில்.

கற்க வேண்டிய நூல்கள் எல்லாவற்றையும் கற்று அத் துறையில் தேர்ச்சிபெற்ற கணவனுக்குக் கற்புடைய அவன் மனைவி பெற்றுக் கொடுத்த தலைமகனால் வரும் இன்பத்தைப் போல முழுதும் துறந்த ஞானிகளுக்கு மெய்யுணர்வில் தோன்று கின்ற இன்பமே பெரிய தாகும். மற்றவை யெல்லாம் துன்ப மல்லாமல் வேறல்ல.

The Bliss of True Knowledge

The happiness born of the contemplation of Truth is itself the bliss of the great who have renounced the world completely, just as the first-son (of unimpeachable quality) born of a virtuous wife, is a source of exquisite joy to the learned husband. Compared to this, all else is mere evil and painful. 100

கற்றுங்(கு) அறிந்தடங்கித் தீதொரீஇ நன்றாற்றிப்
பெற்றது கொண்டு மனந்திருத்திப்—பற்றுவதே
பற்றுவதே பற்றிப் பணியறநின்(று) ஒன்றுணர்ந்து
நிற்பாரே நீள்நெறிச்சென் றார்.

ஞான நூல்களைக் கற்று அவற்றின் பொருளை அறிந்து அதற்கேற்ப அடங்கித் தீயவற்றை விலக்கி நல்லவற்றைச் செய்து கிடைத்ததைக் கொண்டு மனமகிழ்ச்சியை அடைந்து பற்ற வேண்டுவதாகிய முத்திநிலையைப் பற்றுவதற்குரிய ஞான நெறியைப் பற்றித் தம்பணி நீங்கி நின்று மெய்யுணர்ந்து நிற்ப வர்களே உயர்ந்த நெறியில் சென்றவர்களாவார்கள்.

Treading the great Path

Those who have studied, attained true knowledge and have conformed to what they have studied; (ie) in avoiding what is prohibited and perfoming what is enjoined, remaining content with what they have got, holding fast to the means of securing the highest and standing unruffled in the contemplation of the Supreme One, they alone tread the endless path of divine bliss and happiness. **101**

ஐயந் திரிபின் றளந்(து)உத் தியில்தெளிந்து
மெய்யுணர்ச்சிக் கண்விழிப்பத் தூங்குவார் தம்முளே
காண்பதே காட்சி கனவு நனவாகப்
பூண்பதே தீர்ந்த பொருள்.

சந்தேகமும் விபரீதமுமில்லாமல் பொருள் துணை அளவைகளால் அளந்து உத்தியினுலே உண்மையைத் தெளிந்து மெய்யுணர்வாகிய ஞானக்கண் விழித்துக் கொண்டிருக்கச் சிவானந்தத்தில் திளைத்துத் துயின்று கொண்டிருப்பவர்கள் காணுங் காட்சியே உண்மைக் காட்சியாகும். அத்துயில் கனவுக் காட்சி நனவாதலே முடிவான பொருளாகும்.

The Beatific Vision

The sages who have ascertained all things without doubt or error, by right standards of pure reason and have perceived Truth, will ever be awake in the realisation of True Knowledge while they keep their outer eyes shut against the world. What they perceive within them is the realisation of the Highest Truth, and the conversion of that dream, if it be, into waking consciousness is the ultimate attainment of beatitude.

நலம் பெருகுக.

நீதிநெறி விளக்க உரைநடையும், ஆங்கில மொழிபெயர்ப்பும் முற்றுப்பெற்றன.

திருப்பல்லாண்டு

மதுரகவி, திருமுறைச்செம்மல், வித்துவான்,
திரு. தா. ம. வெள்ளைவாரணம் அவர்கள்,
தமிழ்ப்பேராசிரியர், செந்தமிழ்க்கல்லூரி, திருப்பனந்தாள்.

முன்னுரை :

என்றும் நிலைத்திருக்கும் இறைவனுக்குப் பொன்றும் வாழ்க்கையையுடைய நாம் பால்லாண்டு கூறுகிறோம். ஏன்? 'வாழ்த்துவதும் வானவர்கள் தாம்வாழ்வான்' என்று மாணிக்க வாசகர் கூறியுள்ளது போல நாம் நிலைத்து வாழத்தான் இறைவனுக்குப் பல்லாண்டு கூறுகிறோம்.

பிரபந்தம் :

பல்லாண்டு என்பது ஒருவகைப் பிரபந்தம். சைவர்கள், ஒன்பதாம் திருமுறையின் இறுதியில் திருப்பல்லாண்டு என்னும் பிரபந்தத்தைத் தொகுத்துள்ளனர். வைணவர்கள் நாலாயிரத்தின் முதலில் திருப்பல்லாண்டு என்னும் பிரபந்தத்தைத் தொகுத்துள்ளனர். சைவத்திருப் பல்லாண்டைப் பாடியவர் சேந்தனார்; வைணவத் திருப்பல்லாண்டைப் பாடியவர் பெரியாழ்வார். இவ்விரு பல்லாண்டுகளிலும் ஒற்றுமைபல காணப்படுகின்றன.

ஒற்றுமை

சைவத் திருப்பல்லாண்டு	வைணவத் திருப்பல்லாண்டு
1. குடிகுடி......ஆட்செய்மின்	1. குடிகுடியாட்செய்கின்றோம்
2. ஈசற்காட்செய்மின் குழாம் புகுந்து	2. எங்கள் குழாம் புகுந்து ஒல்லைக் கூடுமினோ
3. வஞ்சகர் போயகல	3. கூழாட்பட்டு நின்றீர்களை எங்கள் குழுவினில் புகுதலொட்டோம்.
4. தூய்மனத் தொண்டருள்ளீர்	4. பாடுமனப் பத்தருள்ளீர்
5. (நட்டம் பயில) வல்லானுக்கே பால்லாண்டு கூறுதுமே	5. (ஆழி) வல்லானுக்குப் பல்லாண்டு கூறுதுமே
6. பழவடியாரொடும் (கூடி)	6. (நானும் உனக்குப்) பழவடியேன்.
7. வில்லாண்ட (கனகத்திரள்மேரு)	7. (சார்ங்க மென்னும்) வில்லாண்டான்,

சேந்தனார்;

இவர் சோழ நாட்டில் நாங்கூரில் பிறந்தார். இவருக்குச் சயந்தன் என்பது இளமைப் பெயர். அப்பெயரே சேந்தனார் எனப் பிறகு மருவியது. இவர் பட்டினத்தடிகளிடம் வேலை பார்த்தார். பிறகு வாழ்க்கையை வெறுத்துத் துறவியாகிப் போகர் என்னும் சித்தரிடம் மாணவராயினார். சில்லாண்டு சென்றதும் சித்துக்கள் கைவரப் பெற்றார். திருமாளிகைத் தேவர் என்னும் சிறப்புப் பெயரும் பெற்றார். திருவாவடுதுறையில் வந்து தங்கிப் பல சித்துக்களை நிகழ்த்தினார். திருவீழிமிழலைக்குச் சென்று வீழி நாதருக்கு ஒரு நுந்தா விளக்கு வைக்க நிபந்தம் அளித்தார். இதனை அறிவிக்கும் கல்வெட்டொன்று இன்றும் திருவீழிமிழலை யில் இருக்கிறது. பின்னர் இவர் தில்லைக்குச் சென்றார். அம்பலக் கூத்தன் பேரில் பற்பல பதிகங்கள் பாடினார். இவரிடம் அன்பு மலிந்த இறைவன் இவர் கொடுத்த தவிட்டுக் களியை உண்டு உலகறியச் செய்தார். இவரது பதிகங்கள் திருமாளிகைத் தேவர் திருவிசைப்பா என்றும், சேந்தனார் திருவிசைப்பா என்றும் ஒன்பதாம் திருமுறையில் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

இவர் செய்த சித்துக்களில் ஒரு சில வருமாறு:

1) நடுவானத்தில் குடிசையை நிறுவிக் காட்டியது. 2) குணபம் (பிணம்) எழுந்து நடக்குமாறு காட்டியது. 3) மதில் மேல் உள்ள நந்திகளை உயிருடன் நடந்து வரச் செய்தது. 4) வெந்த பயற்றை முளைக்குமாறு செய்தது. 5) தில்லையில் வடத்தைக் கழற்றி விட்டுத் தேரைத் தானே ஓடச் செய்தது.

பல்லாண்டு பாடியது:

தில்லையில் திருவாதிரை விழா பன்னூறு ஆண்டுகளாக நடந்து வருகிறது. ஏறத்தாழ ஆயிரம் ஆண்டுகட்கு முன்னர் அவ்விழாவில் ஒரு சிறப்பு நிகழ்ந்தது. அஃதாவது: தேர் ஓடும் நாள் நெருங்கியது. தேருக்கு அணி பூட்டி வடமும் பூட்டினார்கள். உரிய பொழுதில் நடராசப் பெருமானும் தேர் ஏறினார். சங்கம் பாடகம் துடிபறை முழங்க அடியார்கள் வடம் பிடித்து இழுத்தார்கள். ஆனால் தேர் நகரவில்லை; அசையக் கூட வில்லை. எவ்வளவோ முயன்றும் தேர் நகருகிறபாடாக இல்லை.

அடியார்கள் சேந்தனுரிடம் சென்று அறிவித்து அழைத்து வந்தார்கள். சேந்தனுர் தேரின் வடத்தை எல்லாம் கழற்றிவிடச் சொன்னுர். வடங்கள் கழற்றப்பட்டன. எல்லாரையும் ஒதுங்கி நிற்கச்சொன்னுர். விழாக் காணவந்த கூட்டமும் ஒதுங்கி இடம் விட்டது. சேந்தனுர் தேருக்கு எதிரே சென்று அதனை நோக்கிய வாறே நின்ருர். வெள்ள நீர் விழிபெருக உள்ளம் உருகிப் பாடத் தொடங்கினுர்.

"மன்னுக தில்லை வளர்கநம் பத்தர்கள்
வஞ்சகர் போயகல
பொன்னின்செய் மண்டபத் துள்ளே புகுந்து
புவனியெல் லாம்விளங்க
அன்ன நடைமட வாள்உமை கோன்அடி
யோமுக் கருள்புரிந்து
பின்னைப் பிறவி அறுக்க நெறிதந்த
பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே."

என்று பாடிக்கொண்டே பின்முகமாக நடந்தார். தேர் தாஞகவே அசைந்தது; அவரை நோக்கி நகர்ந்தது. சேந்தனுர் பாடியும் ஆடியும் வீதியின் முன் செல்லத் தேரும் அவரை நோக்கிய படியே ஓடி வந்தது. நான்கு வீதியும் வலமாக ஓடி நிலை புகுந்தது. இங்ஙனம் தேர் ஓடுமாறு பாடிய பதிகம்தான் திருப்பல்லாண்டு எனப்பட்டது.

பல்லாண்டுப் பதிகம்:

இப்பதிகத்தில் பதின்மூன்று திருப்பாடல்கள் உள்ளன அப்பாடல்கள் ஒவ்வொன்றும் 'பல்லாண்டு கூறுதுமே' என்னும் முடிபு (மகுடம்) பெற்றுள்ளன.

இப்பதிகத்தில் இறைவனைக் குறிக்கும் அருந்தொடர்களாக 1. அண்டங் கடந்த பொருள்; 2. அட்டமூர்த்தி; 3 ஆர்வத் தனம்; 4. ஆலநிழற்பட்டன்; 5. ஆவிக் கமுது; 6. ஆனந்த வெள்ளப் பொருள்; 7. உமைகோன்; 8. சிட்டன்; 9. சிவ லோக நாயகன்; 10. பண்டும் இன்றும் என்றும் உள்ள பொருள் 11. பல்லாண்டென்னும் பதங்கடந்தான்; 12 பாதகத்துக்குப்

பரிசு வைத்தான். 13. பிறவிஅறுக்க நெறிதந்த பித்தன்; 14. மேரு விடங்கன்" என்பன பயில்கின்றன.

இப்பல்லாண்டுப்பதிகம் மிண்டுமனத்தவர்களைப் 'போமின்கள்' என்று துரத்துகிறது; மெய்யடியார்களை 'வம்மின்கள்' என்று அழைக்கிறது; பக்தர்களை 'வளர்க' என்று வாழ்த்துகிறது; தொண்டர்களைக் 'குழாம் புகுந்து ஈசற்கு ஆட்செய்மின்' என்று ஏவுகிறது; சைவர்களை 'சில்லாண்டிற் சிதையும் சில தேவர் சிறுநெறி சேராதீர்' என்று எச்சரிக்கிறது.

"அடியார்கள் தம்மார்பிற் பூசும் திருநீற்றைச் சாம்பல் என இகழமாட்டார்கள்; சேலும் கயலும் திளைக்கும் கண்ணாராகிய நங்கைமார் தமது கொங்கையிற் பூசும் செழுங்குங்குமக் குழம்பு போல உயரிய மணப் பொருளாகவே மதிப்பர்" எனத் திருநீற்றுப் பெருமையைப் பல்லாண்டுப்பதிகம் சொல்லுகிறது.

"உபமன்யு முனிவர் சிறு குழந்தையாக இருந்தபோது பாலுக்கு அழுதார்; அப்போது சிவபெருமான் திருப்பாற்கடலைச் சுருக்கி அக்குழந்தைக்கு ஊட்டினார்" என்ற புராண வரலாற்றையும், "திருமால் ஆயிரம் பூக்கொண்டு வழிபடும்போது அதில் ஒன்று குறையத் தனது தாமரைக் கண்ணை இடந்து அருச்சித்தார்; அதற்கு மகிழ்ந்த சிவபெருமான் சக்கரம் வழங்கினார்" என்ற புராண வரலாற்றையும் 'பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப் பாற்கடல் ஈந்தபிரான்' 'மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்' என்ற அடிகளினால் திருப்பல்லாண்டு தெரிவிக்கிறது.

பாதகத்துக்குப் பரிசு :

விசார சருமர் தாபரம் மணலால் கூப்பி ஆவின்பாலைக் கறந்துகொண்டு ஆட்டினார்; அதனைக் கண்டு வெகுண்டெழுந்த தாதை பாற்குடத்தைக் காலால் இடறிச் சிந்தினான். அங்ஙனம் பிழைத்த தாதைதாளைப் பெருங்கொடு மழுவால் விசாரசருமர் வீசினார்: இப்பாதகத்திற்கும் ஒரு பரிசு தருவாராகி இறைவர் வெளிப்பட்டு வந்து விசார சருமரை அன்புடன் தழுவி அண்டத்துடன் இப்பூதலத்தோரும் வணங்குமாறு பொற்கோயிலும் தந்து தாம் உண்ட கலமாகிய போனகமும் அருளித் தாம் சூடு

வனவாகிய சோதிமணிமுடித் தாமமும் சூட்டிச் சண்டீசன் என்னும் நாமமும் கொடுத்துத் தொண்டர்க்கு நாயகமாம் பதவியும் அளித்தார். இந்த வரலாற்றுச் செய்தியைப் பல்லாண்டின் பத்தாவது செய்யுள் பகர்கின்றது அச் செய்யுள்:

"தாதையைத் தாளற வீசிய சண்டிக்கிவ்
    வண்டத் தொடுமுடனே
பூதலத் தோரும் வணங்கப்பொற் கோயிலும்
    போனக மும்அருளிச்
சோதி மணிமுடித் தாமமும் நாமமும்
    தொண்டர்க்கு நாயகமும்
பாதகத் திற்குப் பரிசும்வைத் தானுக்கே
    பல்லாண்டு கூறுதுமே"

ஆதிரை நாள் :

திருப்பல்லாண்டின் பன்னிரண்டாம் பாட்டில் "திருவாதிரை நாளில் தில்லைக்கு வந்தவர்கள் யார் யார்?" என்ற வினாவும், "தேரார் வீதியில் தேவர்குழாங்கள், நாராயணன், நான்முகன் அங்கி (அக்கினி), இரவி, இந்திரன் என்போர் திசையனைத்தும் நிறைந்து ஆடியும் பாடியும் வந்தனர்" என்ற விடையும் வந்துள்ளன.

செய்யுள் அமைதி :

திருப்பல்லாண்டின் செய்யுட்கள் அறுசீர் ஆசிரிய விருத்தம் என்னும் இனத்தைச் சார்ந்தவை. இவைகள் 'விளம்–விளம் –விளம் – விளம் – விளம் – விளங்காய்' என்னத் தக்க அடிக் கோல் அமைதியுடையன. இருப்பினும் மன்னுகதில்லை என்ற முதற்பாட்டின் நான்காம் அடிமட்டும் எழுசீர் பெறுகிறது. அந்த அடி; "பின்னைப் பிறவி அறுக்க நெறிதந்த பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே." என்றுள்ளது. ஆனால் அஃது "பின்னைப் பிறப்பறு நெறிதந்த பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே" என்றிருக்க வேண்டும். மற்றும் சொல்லாண்ட என்ற நான்காம் பாடலும், சேவிக்க வந்த என்ற ஆறும் பாடலும் எந்தை எந்தாய் என்ற பதின்மூன்றும் பாடலும் மற்ற பாடற்

குரிய அடிக்கோலுடன் ஒவ்வவில்லை; எந்தவகை அடிக்கோலுடனும் பொருந்தவில்லை. எனவே ஏடு பெயர்த்து எழுதுங்கால் அச்செய்யுட்களில் பிழை நேர்ந்திருக்கக் கூடும் என எண்ண வேண்டியிருக்கிறது.

திருப்பல்லாண்டு நிதி :

தில்லையில் திருவாதிரை விழாவின்போது தேர் ஓடுங்கால் திருப்பல்லாண்டு விண்ணப்பம் செய்யும் பொருட்டுத் திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்து அதிபர் **ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருள் நந்தித் தம்பிரான் சுவாமிகள்** அவர்கள் ரூ. 5000 மூலதனம் வைத்துச் ''சிதம்பரத்தில் பல்லாண்டு விளக்கு நிதி''யை நிறுவியுள்ளார்கள்.

மற்றும் காசிவாசி சுவாமிகள் அவர்கள் சிதம்பரத்தில் திருப்பல்லாண்டுப் பதிகத்தைச் சலவைக் கல்லில் பொறித்துப் பதித்துள்ளார்கள்.

முடிவுரை :

உலகில் வழும் மானிடர்களைப் பற்றிப் பாடாமல் இறைவன் மீது கவிபாடி நாம் நலம் பெறுவோமாக. சுந்தரரும் ''தம்மையே புகழ்ந்து இச்சை பேசினும் சார்வினும் தொண்டர்த் தருகிலாப் பொய்ம்மையாளரைப் பாடாதே எந்தை புகலூர் பாடுமின் புலவிர்காள்'' என்கிறார். எனவே நாமும் பல்லாண்டென்னும் பதங் கடந்தானுக்கே பல்லாண்டு கூறிப் பல்லாண்டு வாழ்வோமாக.

தாயுமானவரின் — பராபரக்கண்ணிகள்

Couplets in venerable adoration of the Omnipotent and Omnipresent

sung by

St. THAYUMANAVAR

9

The body in which the soul can live may vary and they are numberless. It can exist even in the body of insignificant creation, such as worm etc. Excepting the varying spiritual standards they possess, there can be no difference between the human beings and other living beings, so far as the level of the soul is concerned. The realisation of this fact must necessarily lead one to respect all living beings as our equals, and to have mercy on them and bestow all help forgiving their shortcomings, if any, with divine grace.

எவ்வுயிரும் தம்முயிர்போல் எண்ணி இரங்கவுநின்
தெய்வ அருட்கருணை செய்யாய் பராபரமே!

(பொ - உரை) எத்தகைய சிற்றுயிரினையும் என் அருமையான உயிர் போன்று எண்ணி அவைகட்கு இரங்குமாறு நினது தெய்வத்தன்மை பொருந்திய கருணையை எனக்குத் தந்தருள்வாய்.

Oh! Lord Supreme! Bless me with your Divine Grace to realise that all living beings of your Creation are my equals and my kith and kin entitled to my full reverence, love and sympathy.

Translated by Sri. K. PALANISAMY, M.A., Lecturer in Tamil, Sri. K. G. S. Arts College, Arulnandi Nagar.

Sri Kumaragurupara Swamigal Memorial Feeding Charity at Kedarnath Rs. 18,000/-

This endowment is founded by **His Holiness Kasivasi Arulnandi Tambiran Swamigal Avergal**, Head of Sri Kasimutt, Tirupanandal and Sri Kumaraswami Mutt, Varanasi to feed the Pandas (Brahmins) daily at Kedarnath which shines as a Jewel among the twelve sacred Jothir lingam shrines, which is situated at the foot of the 22,000 feet snow clad Himalayas at a height of 11,750 feet, which is covered by snow for six months in the year and worshipped by the Devas, which is the first hillock to the Kailas, where the river Mandakini takes its source and where Siva devotees, who have subdued the five elephant like senses, adorn Siva with flowers and worship Him.

This endowment shall be styled as "Sri Kumaragurupara Swamigal memorial feeding charity at Kedarnath."

2. The capital of the endowment consists of Government Securities to the face value of Rs. 18,000/- invested in 3% Conversion Loan of 1946 Government Promissory Notes CA. 243250 for Rs. 5000/- CA. 243415 for Rs. 5000/- CA. 243416 for Rs. 5000/- 242220 for Rs. 1000/- CA. 242221 for Rs. 1000/- CA. 242222 for

Rs. 1000/- Total Rs. 18,000/- The administration to the fund shall vest in the Donor and his successors-in-interest.

3. The annual interest accruing on the capital shall be utilised for conducting daily feeding of two Pandas (Brahmins) for three months in the year commencing from 15th May in Kedarnath at the foot of the Himalayas.

4. The feeding shall be conducted every year in accordance with the amount of interest derived and prices of commodities then prevailing.

5. The income from the endowment shall not be diverted to any other purpose than that mentioned above. The capital will be invested in highest interest yielding Securities and will always ramain in the name of the Donor and his successors-in-interest.

Tirupanandal
Dated 8-7-1963. } (Sd.) *Kasivasi Arulnandi Tambiran*

Registered at Tiruvadamarudhur Sub-Registrar's office on 10-7-1963 as No. 30 of 1963 of Book 4 volume 50 pages 186 to 188.